தமிழ் இசை மலர்
4

செட்டிநாடு டாக்டர்

ராஜா சர் மு. அண்ணாமலைச் செட்டியார் அவர்கள்

நினைவு வெளியீடு

தமிழ் இசைச் சங்கம், சென்னை - 1

...மபர், 188. — மறைவு : 15, ...

அக்டோபர் 1948
சருவதாரி—ஐப்பசி

பதிப்பாசிரியர் :
ஜெ. எம். சோமசுந்தரம் பிள்ளை, பி.ஏ., பி.எல்.
தமிழிசைச் சங்கம் காரியாலயம், 8/9, சிங்கண்ண நாய்க்கன் தெரு, சென்னை 1

கமர்ஷியல் பிரிண்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ், மதராஸ்-1

செட்டிநாடு

டாக்டர் ராஜா சர். மு. அண்ணாமலை செட்டியார் அவர்கள், *Kt., LL D.,*

தோற்றம் : *30*, செப்டம்பர், *1881* — மறைவு : *15*, ஜூன், *1948*

நமது சங்கம்

டி. எஸ். கச்சாபிகேச முதலியார்

நமது பிரிவாற்றுமை

நமது தமிழ் இசைச் சங்கத்தைத் தோற்றுவித்து அதன் தந்தையும் தாயுமாயிருந்து கண்ணைக் கண்ணிமை காப்பது போல் காத்து நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளருமாறு செய்து வந்த செட்டி நாட்டு ராஜா சர் அண்ணாமலை செட்டியார் அவர்கள் திடீரென நம்மை விட்டுப் பிரிந்து நாளது ஆண்டு ஜூன் மாதம் 16-ம் நாள் மாலை இறைவன் திருவடி நீழலை எய்தினார்கள்.

அவர்களுடைய மறைவைக் கேட்டு அமிழ்தினுமினிய தமிழ் மொழி பேசும் நல்லுலகம் முழுவதும் ஆறாத் துயரத்தில் ஆழ்ந்தது. அவர்களது பிரிவு தமிழ் நாட்டார்க்கு ஈடுசெய்ய முடியாத ஒரு பெரிய நஷ்டமாகும். இந்த நூற்றாண்டில் இணையற்ற வள்ளல் என்ற ஒரு தனிச் சிறப்பு எய்திய பெருந்தகையாவார் நமது செட்டி நாட்டு மன்னர்.

அவர்கள் தமது தளரா முயற்சியாலும் சீரிய வாழ்க்கையாலும் மக்கள் பிறவிப் பயனால் எய்த வேண்டிய சகல நலன்களையும் இறைவனருளால் பெற்றிருந்தார்கள். அவர்கள் தமக்கென வாழாப் பிறர்க்குரியரான படியால் அந்த நலன்களை யெல்லாம் தமிழ் மக்களுக்கே அள்ளிக் கொடுத்து ஈத்துவக்கும் பேரின்பத்தைத் துய்த்து வந்தார்கள். "ஊருணி நீர் நிறைந் தற்றே, உலகவாம் பேரறிவாளன் திரு" என்னும் செந்தமிழ் மறை மொழி முற்றிலும் உண்மை என்று தினந்தோறும் தமது வாழ்க்கையில் நிதர்சனமாகக் காட்டி வந்தார்கள்.

நமது நாடு இருநூறு வருஷ காலமாக சுதந்திரத்தை யிழந்து அடிமையுற்று நலிந்திருந்த காரணத்தால், பொதியிலே பிறந்து தென்னன் புகழிலே வளர்ந்த தமிழ் அணங்கும் உயர் நிலை நீங்கித் தாழ் நிலை யுற்றிருந்தாள். அதனைக் கண்டு மனம் பொறாமல், முற்காலத்தில் தமிழ் வேந்தர் தாய் மொழியை வளர்த்தது போலவே தாமும் வளர்க்க ஆர்வம் கொண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை நிறுவினார்கள். அது உலகத்திலுள்ள சிறப்பு வாய்ந்த பல்கலைக் கழகங்களுள் ஒன்றாகத் திகழ்ந்து வருவதை எல்லோரும் அறிவார்கள்.

அதன் பின்னர், செட்டிநாட்டரசர் இயற்றமிழை வளர்ப்பதோடு திருப்தியடையாமல் இசைத் தமிழையும் வளர்க்க ஆசையுற்றார்கள். அதற்காக 1943-ம் ஆண்டில் நமது தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்தார்கள். அவர்களும் அவர்களுடைய சகாக்களான டாக்டர் ரா. கெ. சண்முகம் செட்டியார் போன்ற அறிஞர்களும் தமிழ் நாட்டின் பலயிடங்களுக்கும்

DR. R. K. SHANMUKHAM CHETTY

MUGUGA VILLA
Madras, 10-10-'48

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

1.

[illegible], அவர் [illegible] [illegible] [illegible] ராஜா அவர்களுக்கு [illegible] [illegible] [illegible]. [illegible] [illegible] [illegible] பெருமையை அவரிடம் நன்றாகக் காணலாம்.

[illegible] பல [illegible] ராஜா அவர்கள் [illegible] [illegible] [illegible]. அவருடைய [illegible] பலரும் பாராட்டு [illegible]. [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible].

தமிழ் நாட்டிற்கு அவர் செய்த தொண்டை தமிழ் மக்கள் என்றும் மறக்க முடியாது. தமிழ் [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible], [illegible] தமிழ் [illegible] [illegible] — [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible]. ராஜா அவர்கள் [illegible] [illegible] [illegible], அவர் தமிழ் [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible].

ரா. க. [illegible]

செட்டி நாட்டு ராஜா ஸர் பிரிவு

மகாமகோபாத்தியாய பண்டிதமணி
மு. கதிரேசன் செட்டியார்

செட்டி நாட்டு ராஜா ஸர் அவர்கள் தம் புகழுடலை நிறுவிப் பூதவுடல் நீத்த செய்தி பொதுவாக இந்திய மக்களையும் சிறப்பாகத் தமிழ் நிலத்தாரையும் துயரக்கடலுள் மூழ்குவித்தது. ஊக்கம், உறுதி, உணர்ச்சி, அருஞ்செயலின் ஆக்கம், அறிவு, அருள், அன்பு, ஆண்மை முதலிய உயர்ந்த குணஞ் செயல்களுக்கெல்லாம் நிலையமாக விளங்கிய ராஜா ஸர் அவர்கள் "தோன்றிற் புகழொடு தோன்றுக" என்றதற்கு இலக்கியமாகப் பிறந்தவர்கள்; வாணிகத் துறையில் நிகரற்ற திறமையுடையவர்கள்; தாம் மேற்கொண்டது எத்தகைய அருஞ் செயலாயினும், அதனைப் பல்லாற்றானும் சூழ்ந்து தெளிதலும் விரைந்து முடித்தலும் அவர்கள் இயல்பு. ஒரு நல்ல காரியத்தை முடிக்க வேண்டுமென்று எண்ணினால் "செய் தொழில் பயனால் உரைப்பரே யன்றித் தெரிகுநர் உரையினால் உரையார்" என்றபடி அதனைப் பற்றி நாவினால் விரிவாகப் பேசிய அளவில் ஒழியாது பயன் விளைக்கும் முகமாகச் செயலில் முடித்துக் காட்டும் திறமையுடையவர்கள். பெருஞ் செல்வராகவும் இடையறாமல் பணியாற்றும் இயல்பினராகவு மிருந்தும் காட்சிக்கு எளியராகவும், கடுஞ்சொல் இல்லாதவராகவும் விளங்கிய அருமை பாராட்டத்தக்கது. தம் வாழ் நாளில் ஒவ்வொரு நாளிலும் செய்யத்தக்க காரியங்களுள் இன்ன இன்ன காரியத்தை இன்ன இன்ன நேரத்தில் செய்வதென்று வரையறுத்துக் கொண்டு அப்படியே செய்து வந்தார்கள். ராஜா ஸர் அவர்கள் பிறரோடு உரையாடுதலிலும், பிறர் எழுதிய கடிதங்களுக்கு அவ்வப்போது மறுமொழி எழுதுவதிலும், தம்பால் வந்தாரை சிறந்த முறையில் உணவூட்டி உபசரித்தலிலும் நிகரற்ற பெருமை வாய்ந்தவர்கள். இத்துறைகளில் அவர்கள் நாகரிகம் அறிவுடைப் பெருமக்கள் எல்லோராலும் பாராட்டப் பெற்று வந்தது. மக்களுக்குச் செய்யும் ஒப்புரவறங்களுள், கலைக் கண்ணைத் திறந்து வைத்தலே சிறந்ததாகும் எனக் கொண்டு, அண்ணாமலைப் பல்கலைக் கழகம் நிறுவி அதனை உயிர் போலப் பேணி வந்தார்கள். தமிழ் இசையின் சுவையை உலகம் உணர அரும்பாடு பட்டார்கள். மேலும் இவர்கள் அறங்கள் எல்லையில்லாதன. பொருளால் அறத்தை வளர்த்துப் புகழ் பெற்ற பெரியார் தென்னாட்டில் ராஜா

ளர் அவர்களே. அவர்கள் பிரிவை நினைவுங்கால் உள்ளம் கவல்கின்றது. ஆயினும் ராஜா ஸர் அவர்களைப் போலவே திறமையும் வண்மைக் குணங்களும் நிறைந்த அவர்கள் குமாரர்களாகிய குமார ராஜா ஸர் முத்தையா செட்டியார், திரு. இராமநாதன் செட்டியார், திரு. சிதம்பரஞ் செட்டியார் ஆகிய மும் மணிகளும் தமிழுக்கும் தமிழ் நிலத்தாருக்கும் ஆதரவாக விளங்குதல் நமக்கு ஆறுதலளிப்பதாகும். ராஜா ஸர் மேற்கொண்ட அறத்துறைகள் பிறர்க்கு வழிகாட்டியாகத் திகழ்வனவாக! அவர்கள் நல்லுயிர் இறையடி நீழலில் இன்புறுவதாக.

இசையைக் காத்த பெருந்தகை

ரசிகமணி டி. கே. சி.

இந்த உலகத்தில் எத்தனையோ நல்ல விஷயங்கள் உண்டாகி வந்திருக்கின்றன. அவைகளில் மனுஷனுடைய ஸ்தூல தேகத்துக்கு வேண்டிய விஷயங்கள் தொடர்ந்து நின்று உபயோகப்பட்டு வருகின்றன. கலப்பை என்று ஒன்றைச் செய்தான். இன்னும் நிற்கிறது அது. நெருப்பு மிக அரிய பொருள்; அதுவும் நிலைத்து நின்று மனுஷனுக்கு உதவுகிறது. ஏன், பாஷை ஒன்றை மனுஷன் செய்தான். இன்றியமையாத விஷயம் அது. அதுவும் நிலைத்து நிற்கிறது. ஆனால் கலைகள் சம்பந்தமாகக் காரியம் வேறாக இருக்கிறது.

மனுஷனுக்குச் சில சில சந்தர்ப்பங்களில் கலைகள் சம்பந்தமாக சிருஷ்டி தத்துவம் உதித்திருக்கிறது. அபூர்வமான சிருஷ்டிகளை உண்டு பண்ணியிருக்கிறான் மனுஷன். அந்த சிருஷ்டிகளைப் பார்க்கும் போது ஏதோ வேறொரு உலகத்திலிருந்து வந்தவையோ என்று சொல்ல வேண்டியிருக்கிறது. ஆனால் அவைகளால் மனுஷனுடைய ஸ்தூல தேகத்துக்கு யாதொரு பயனும் இல்லை. ஆகவே அவைகளில்ப் பல மறைந்து போய்விட்டன.

சிற்பங்களாகவும், சித்திரங்களாகவும் எத்தனையோ அரிய சிருஷ்டிகள் மறைந்து போய்விட்டன. ஏதோ சிலவற்றை மனுஷன் காத்து வந்திருக்கிறான். அதற்காக முன்னோர்களுக்கு நன்றி செலுத்த வேண்டும் நாம்.

தமிழ்க் கவிகள் என்றால், தெய்வத்தன்மை வாய்ந்தவைகளாய் ஆயிரக்கணக்காக, அகஸ்தியர் காலத்தில் இருந்தன. அத்தனையும் தொலைந்து போய் விட்டன.

அப்படியே ராகங்களும் பாடல்களும் எத்தனை எத்தனையோ இருந்து மறைந்து போய் விட்டன. ஏன், இன்றும் பல மறைந்து போகப் பார்க்கின்றன.

பழைய பண்பட்ட ராகங்கள் தமிழ் நாட்டில் இன்னும் சில இருக்கின்றன. அவைகளுக்குச் சமானமாக ஒரு ராகத்தையும் புதிதாகச் செய்ய முடியாது. ஏதோ "அபூர்வ ராகம்" என்று சிலவற்றைப் பாடகர்கள் உண்டுபண்ணி யிருக்கிறார்கள். அவைகளில் சுவை கிடையாது. உயிர் இல்லவே யில்லை.

ஆனாலும் அவைகளையே கச்சேரிகளில் பாடுகிறது, திறமையைக் காட்டுகிறது, என்ற படாடோபம் வந்து நயமான பண்பட்ட ராகங்களை விலக்கி விடுகின்றன. நல்ல நாணயத்தைப் போலி நாணயம் வெளியே துரத்தி விடும் என்ற கணக்குக்கு வந்து விட்டது தமிழ் நாட்டு கனராகங்கள் பாடு. பழைய தமிழ்ப் பாட்டோடு ஒட்டி நிற்கும் ராகங்கள் எப்படியோ பிழைத்து வந்திருக்கின்றன. நம்முடைய அதிர்ஷ்டம் அது. ஆயிரக் கணக்கான வருஷங்களாகப் பாதுகாத்து வந்த செல்வங்களைப் போக்கடிக்கப் பார்க்கிறதென்றால் எவ்வளவு பரிதாபமான காரியம்.

சென்ற முப்பது நாற்பது வருஷமாக நம்முடைய சங்கீதத்துக்கு, உலகத்திலேயே சிறந்தது என்று கருதுகிற சங்கீதத்துக்கு, ஆபத்துத் தோன்றி கேடு விளைத்து வந்தது.

வந்த ஆபத்தை நீக்குவது அவசியமாய் இருந்தது; ஆனாலும் கஷ்டமாய் இருந்தது.

ராஜா ஸர். அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் அந்த ஆபத்தை நீக்க முன் வந்தார்கள். அவர்களுக்கு அந்த அரும் பெரும் பணியானது வாழ்க்கை லட்சியமாக ஆய்விட்டது.

தமிழிசைச் சங்கம் ஆரம்பித்தது. தமிழ் நாட்டு மக்கள் ஒரு ஆவேசத்தோடு அதில் கலந்து கொண்டார்கள். இப்போது சகலருக்குமே பட்டு விட்டது—தமிழ் தான் பூர்வமான பண்பட்ட சங்கீதத்தைக் காக்கும் என்பதாக. பிற பாஷை மூலமாக, (பாடுகிறவருக்குத் தெரியாத பிற பாஷை மூலமாக) சங்கீதத்தைப் பாடிப்பாடி சங்கீத உணர்ச்சியோ பாவமோ ஒன்றும் இல்லாமல் போக நேர்ந்து விட்டது என்று பிரபல பாடகர்களே சொல்ல ஆரம்பித்து விட்டார்கள். உணர்ச்சி பாவம் இல்லாத சங்கீதம் உயிரற்ற சங்கீதம் என்று கண்டு கொண்டார்கள். பெரிய விஷயம் அது.

ராஜா ஸர் அவர்களுடைய சங்கீத பக்தியே இத்தகைய அரிய விஷயத்தைச் சாதித்திருக்கிறது. தமிழ் நாடு செய்த புண்ணியம்.

சங்கீதம் ஸ்தூல தேகத்துக்கு உதவுவது அல்ல, தான், மறைந்து போகக் கூடிய வஸ்து தான். கலை மேலுள்ள பக்தியே அதை பாதுகாக்க முடியும்; பாதுகாத்தும் விட்டது.

இந்த விதமாக சங்கீதத்தை எண்ணும் போது ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களுடைய பிரிவை எண்ணாமல் இருக்க முடியுமா, முடியாது. அரியதொரு காரியத்தைச் சாதித்து விட்டு இறைவனடி சேர்ந்து விட்டார்கள். புண்ணிய மூர்த்தியாக நம்முடைய இதயத்தில் விளங்குகிறார்கள்.

உயிர் வாழ்கிறார் !

ரா. கிருஷ்ணமூர்த்தி ஆசிரியர் : "கல்கி"

அமெரிக்காவின் பிரபல கோடீசுவரனான ராக்பெல்லரைப் பற்றிச் சமீபத்தில் ஒரு கதை படித்தேன். கோடி கோடியாக அவர் டணம் சேர்த்துக் கொண்டிருந்த சமயத்திலும் கவலை அவரைப் பிடுங்கித் தின்று கொண்டிருக்குமாம்! ஒரு சிறிய நஷ்டம் நேர்ந்து விட்டாலும் மிக்க மனவேதனைக்கு உள்ளாவர்ராம். ஒரு சமயம் அவர் நாற்பதினாயிரம் டாலர் பெறுமான தானியத்தைக் கப்பலேற்றி அனுப்பினாராம். கப்பல் போய்க் கொண்டிருந்த பிரதேசத்தில் பெரிய புயல் அடிப்பதாகத் தெரிய வந்ததாம். "ஐயையோ! இன்ஷியூர் செய்ய வில்லையே? என்று தவித்தாராம். இன்ஷியூர் செய்ய 150 டாலர் செலவாகுமே என்பதற்காக இன்ஷியூர் செய்ய வில்லை. இப்போது புயலைப் பற்றிச் செய்தி வந்ததும் இன்ஷியூர் செய்யாதது பிசகு என்று எண்ணினாராம். உடனே ஆளை அனுப்பி இந்த நேரத்தில் எந்தக் கம்பெனியாவது இன்ஷியூர் செய்யுமா என்று பார்க்கச் சொன்னாராம். ஒரு கம்பெனியார் அதற்குச் சம்மதிக்கவே போன ஆசாமி இன்ஷியூர் செய்து விட்டுத் திரும்பினார். ஆனால் அவர் திரும்பி வந்து செய்தி சொன்னதும் ராக்பெல்லர் முன்னைக் காட்டிலும் "ஐயோ! போச்சே!" என்று அலறினாராம். காரணம் விசாரித்த போது, கப்பல்கள் ஜாக்கிரதையாகப் போக வேண்டிய இடத்துக்குப் போய்ச் சேர்ந்தன வென்று தெரிய வந்தது. பின்னே ராக்பெல்லர் எதற்காக அலறினார் என்றால், "அனாவசியமாக இன்ஷியூர் செய்யச் சொன்னேமே? நூற்றைம்பது டாலர் அநியாயமாய்ப் போச்சே!" என்பதற்காகத் தான்.

ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களைத் "தமிழ் நாட்டு ராக்பெல்லர்" என்று சிலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். இது எவ்வளவு தூரம் சரியான உவமை என்று நான் சொல்ல முடியாது. ஆனால் ஒரு விஷயத்தில் இந்த இரண்டு கோடீசுவரர்களுக்கும் வெகு தூரத்துக்கு வெகு தூரம்—கிட்டத்தட்ட கோடி மைல் தூரம்—என்று நான் சொல்ல முடியும்.

1941-ம் வருஷத்தில் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் தமிழிசை இயக்கத்துக்குத் தலைமை வகித்து நடத்த ஆரம்பித்தார்கள். அந்த இயக்கம் சம்பந்தமாக அந்த வருஷத்திலே தான் அவர்களை நான் சந்திக்க நேர்ந்தது. பிறகு சில காலம் அடிக்கடி பார்க்கவும் பேசிப்பழகவும் பாக்கியம் கிடைத்தது. இதே நாட்களில் தான் மலாய் நாடும் பர்மாவும் ஜப்பானியரால் கைப்பற்றப் பட்டன. மலாய்—பர்மா நாடுகளில் செட்டி நாட்டு அரசருக்கு ஏராளமான கொடுக்கல் வாங்கலும் வியாபாரஸ்தலங்களும் நிலபுலன்களும் உண்டு என்பது அனைவரும் அறிந்த விஷயம். ஒரு சமயம் ராஜா ஸர் அவர்களைச் சந்தித்த போது மலாயாவிலும் பர்மாவிலும் அவர்களுக்கு நேர்ந்திருக்கக் கூடிய பெரு நஷ்டங்களைக் குறித்து அநுதாபம் தெரிவிக்கும் முறையில் பிரஸ்தாபித்தேன். அப்போது அவர்கள் கூறிய பதில், பாசமறுத்துப் பற்றறுத்து முற்றும் துறந்த முனிவரின் மனோ நிலையை வெளிப் படுத்தியது கண்டு திகைத்துப் போனேன். "ஆமாம், பர்மாவிலும் மலேயாவிலும் எங்களுக்குப் பெரு நஷ்டந்தான். ஆனாலும் அதைப் பற்றி நான் கவலைப்பட வில்லை. அங்கே யெல்லாம் நமக்குச் சொத்து இல்லை. எப்போதும் இருக்க வில்லை, என்பதாக எண்ணிக் கொண்டு விட்டேன்" என்றார்கள்.

என்னுடைய நண்பர் ஒருவர் வெகு தாராள இயல்பு உள்ளவர். அவருடைய தாராளத்தைப் பார்த்து விட்டுச் சிலர் அவர் நிறையப் பணம் சேர்த்திருக்க வேண்டும் என்று நினைப்பதுண்டு. "உங்களுக் கென்ன, நாலைந்து லட்சமாவது இருக்குமா?" என்று சிலர் அப்பட்டமாகக் கேட்பதுண்டு. ஆமாம், நாலைந்து லட்சத்துக்கு இருக்கும். கொஞ்சம் கூடவே இருக்கும்" என்று அந்த நண்பர் பதில் சொல்லுவார். என், ஐயா, இப்படி இல்லாததைச் சொல்கிறீர்?" என்று கேட்டால், நாலைந்து லட்சம் இருந்தால் பாங்கிலே தானே போட்டு வைத்திருப்பேன்? இப்போது பாங்கிலே பணம் இருப்பதாக நினைத்துக் கொள்கிறேன். நாலைந்து லட்சம் என்ன? பத்து லட்சம் இருப்பதாகவே எண்ணிக் கொள்கிறேன். யார் என்னைத் தடுக்க முடியும்?" என்பார்.

இதே விதமான பற்றற்ற மனப்பாங்கை ராஜா ஸர் அவர்கள் வேறு விதத்தில் காண்பித்தார்கள். பர்மாவிலும் மலாயிலும் அவர்களுக்கு இருந்த லட்ச லட்சமான செல்வத்தை யெல்லாம் ஒரு நொடிப் பொழுதில் "இல்லை" என்று தீர்மானித்துக் கொண்டு விட்டார்கள். இதனால் மனதில் கவலைக்கும் இடமில்லை என்றாயிற்று.

ஆனல் ராஜா ஸர் அவர்களுடைய மனதில் கவலையே இல்லாமல் போய் விட்டதா? பர்மா—மலாய் சொத்துக்களைப் பற்றித் தான் கவலை யில்லை யென்ருயிற்றே தவிர, வேருெரு பெருங் கவலை குடிகொண்டிருந்தது.

"தமிழ் இசை இயக்கத்தை எதிர்க்கிருர்களே? ஏன் எதிர்க்கிருர்கள்?" தாய் மொழியை ஏன் வெறுக்கிருர்கள்? என்ற கவலை அச்சமயத்தில் ராஜா ஸர் அவர்களுக்குப் பெரும் வேதனை யளித்தது.

"மலாய்—பர்மா சொத்துக்களை இல்லை யென்று எண்ணிக் கொண்டு விட்டேன். அதைப் பற்றிக் கவலையில்லை. ஆனல் தமிழ் இசை இயக்கத்தைப் பற்றித் தான் கவலையா யிருக்கிறது." தமிழ் இசை இயக்கத்துக்கு விரோதமாக அவர் அப்படிப் பேசி இருக்கிருரே? ஏன் அப்படிப் பேசி இருக்கிருர்? தமிழ் இசை இயக்கத்தை எதிர்த்து இந்தப் பத்திரிகை இப்படி எழுதி யிருக்கிறதே? ஏன் இப்படி எழுதி யிருக்கிறது? இந்த எதிர்ப்பை நாம் எப்படிச் சமாளிப்பது? எப்படி இயக்கத்துக்குப் பலம் அளிப்பது என்பதாக ஒரு நாள் அல்ல, சில நாள் அல்ல, பல காலம் கவலைப் பட்டார்கள். கோடி கோடியாகப் பணம் நஷ்டமாகிக் கொண்டிருந்த காலத்தில் செட்டி நாட்டு அரசரின் மனக் கவலை யெல்லாம் தமிழிசை இயக்கத்தைப் பற்றியதாகவே இருந்தது. இதிலிருந்து பணத்தைப் பற்றி அவர்கள் எத்தகைய பற்றற்ற மனே நிலையை அடைந்திருந்தார்கள் என்பது வெளியாயிற்று. தமிழிசையில் அவர்களுடைய பற்று எவ்வளவு உறுதியானது என்பதும் வெளியாயிற்று.

தமிழிசை இயக்கத்தைப் பற்றிச் செட்டி நாட்டு அரசரின் மனக் கவலையை நானும் சில சமயம் அதிகமாக்கினேன் என்று சொல்ல வேண்டியதா யிருக்கிறது. தமிழிசையை எதிர்ப்பவர்களை ஒரு சமயம் நான் காரசாரமாகத் தாக்கி ஒரு கட்டுரை எழுதி யிருந்தேன். இந்தக் கட்டுரை வெளியான சில நாளைக்கெல்லாம் ராஜா ஸர் அவர்களை நான் பார்க்க நேர்ந்தது. வேறு விஷயங்களைப் பற்றிப் பேசினர்களே தவிர கட்டுரையைப் பற்றி ஒன்றும் சொல்ல வில்லை. "ஒரு வேளை படிக்க வில்லை போலிருக்கிறது!" என்று நினைத்துக் கொண்டேன். கடைசியில் புறப்படும் சமயத்தில் அவர்கள் கூறியதாவது:—"உங்களுடைய கட்டுரையைப் படித்தேன். நன்ருக எழுதி யிருக்கிறது. ஆனல் ரொம்பக் கடுமையாகத் தாக்கி யிருக்கிறது. உங்களுக்குப் புத்தி சொல்ல வரவில்லை. என் அபிப்பிராயத்தைச் சொல்கிறேன்.

இவ்வளவு காரமாக எழுதுவதினால் காரியத்துக்கு அநுகூலம் உண்டா என்று யோசிக்க வேண்டும்!"

இதைக் கேட்டு நான் ஒரு நிமிஷம் திகைத்துப் போனேன். பிறகு, "எதிர்ப்பவர்கள் கடுமையாகத் தானே எதிர்த்திருக்கிறார்கள்?" என்றேன்.

எதிர்ப்பவர்கள் எப்படி வேணுமானாலும் பேசலாம்; எழுதலாம். ஆனால் நாளைக்கு அவர்களும் நம்முடைய கட்சிக்கு வருவதற்கு இடம் வைத்து நாம் எழுத வேண்டும். ரொம்பக் காரமாக எழுதி விட்டால் அவர்கள் நம்முடன் சேருவதற்கே இடமில்லாமற் போய் விடும்" என்று ராஜா ஸர் கூறியது, நேற்றுத் தான் கூறியது போல் என் காதில் ஒலிக்கிறது.

ராஜாஜி அவர்கள் அடிக்கடி எனக்கு இதே விதமான புத்திமதி கூறியதுண்டு. "அதிகமாகத் தாக்கி எழுதக் கூடாது", என்று ராஜாஜி அவர்கள் அஹிம்சை நெறியில் நின்று எனக்கு யோசனை சொன்னார்கள். அதே விதமான யோசனைக் "காரிய சாதனை"யை முன்னிட்டு ராஜா ஸர் அவர்களும் கூறினார்கள். வெவ்வேறு நோக்குடன் பார்த்து இந்த இரு பெரியவர்களும் ஒரே முடிவுக்கு வந்திருப்பதை நினைக்க நினைக்க எனக்கு வியப்பாயிருந்தது.

*　　　*　　　*

நம்முடைய காலத்து இந்திய பிரமுகர்களுக்குள்ளே ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் மிக உன்னதமான ஸ்தானத்துக்கு உரியவர்கள் என்பதில் சந்தேகமில்லை. அவர்களுடைய ஆலயத் திருப்பணிகளும், சொந்தப் பொறுப்பில் தில்லைப் பதியில் ஸ்தாபித்த அண்ணாமலை சர்வ கலாசாலையும் மற்றக் கல்வித் துறைத் தொண்டுகளும், கடைசியாக அவர்கள் தலைமை வகித்து நடத்திய தமிழிசை இயக்கமும் தமிழ் நாட்டின் தற்கால சரித்திரத்தில் செட்டி நாட்டு அரசருக்கு அழியாத உயர்ந்த ஸ்தானத்தை அளித்திருக்கின்றன.

இவையெல்லாம் தவிர, ராஜா ஸர் அவர்கள் தம் சொந்த வாழ்க்கையில் முன்னேறிய வரலாறு ஓர் அதிசய இதிகாசமாக விளங்குகிறது. அவர்களுடைய அறிவும், ஆற்றலும் காரியத் திறமையும், தோல்விகளைக் கண்டு அஞ்சாத நெஞ்சுறுதியும் வருங் கால சந்ததிகளுக்கு உதாரணமாக விளங்கக் கூடியவை.

விருந்தினரை உபசரிப்பதிலும், நண்பர்களுடன் அளவளாவுதலிலும், ஊழியர்களை நடத்துவதிலும், முன் பின் தெரியாதவர்களிடம் கூட ஆதரவாகப் பேசுவதிலும், தம்முடைய உயர்ந்த

ஸ்தானத்தைப் பற்றிய எண்ணமே இல்லாமல் அவர்கள் நடந்து கொண்ட முறை, தமிழ் மக்களின் பண்பாட்டின் சிகரமாக விளங்கியது.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் ராஜா ஸர் தமிழகத்தில் பிறந்திருந்தால் வீர சாகஸச் செயல்கள் பல புரிந்து இராஜ தந்திரியாக விளங்கி பல அரசர்களுடைய நன்மதிப்பைப் பெற்றுத் தமக்கென்று ஒரு பெரிய சாம்ராஜ்யத்தையே ஸ்தாபித்துக் கொண்டிருப்பார்கள். நாலு திசைகளிலும், கடல் கடந்த நாடுகளிலும், தம்முடைய வெற்றிக்கொடி கம்பீரமாகப் பறக்கும்படி செய்திருப்பார்கள்.

பிரிட்டிஷ் ஆட்சிக்கு உட்பட்ட தமிழகத்தில் பிறந்தபடியால் சமூகத்தில் அவர்கள் அடைந்த உயர்வும் கீர்த்தியும் வேறு ரகத்தைச் சேர்ந்தவையாயின.

ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் "காலமானார்" என்று நம்புவது இன்னமும் எனக்குக் கஷ்டமாகத்தான் இருக்கிறது. ஒரு விதத்தில் அந்தச் செய்தி உண்மையில்லைதான். ராஜா ஸர் அவர்கள் தம்முடைய அருமைப் புதல்வர்கள் மூன்று பேரிடத்தும் இன்றைக்கும் உயிர் வாழ்கிறார்கள் என்றே சொல்லத் தோன்றுகிறது. ராஜா சர் முத்தையா செட்டியார், ஸ்ரீ ராமநாதன் செட்டியார், ஸ்ரீ சிதம்பரம் செட்டியார் ஆகிய மூவரும் ராஜா சர் அவர்களுடைய திரண்ட செல்வத்தை மட்டுமல்லாமல் அவரிடமிருந்த அரும் பெரும் குணங்களையும் ஆற்றல்களையும் கூடப் பங்கிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர் நடத்தி வந்த திருப்பணிகளை இவர்களும் தொடர்ந்து நடத்தி வருகிறார்கள்.

எனவே இந்த மூன்று புதல்வர்களின் உருவத்தில் ராஜா சர் அவர்கள் இன்னமும் உயிர் வாழ்ந்து வருகிறார்கள் என்று ஏன் சொல்லக்கூடாது?

வீரத் திரு. செட்டிநாட்டரசர்

அ. கணபதி பிள்ளை, கரந்தைத் தமிழ்ச் சங்கம்

செட்டிநாட்டரசர் வீரத்திரு. மு. அண்ணாமலைச் செட்டியார் அவர்களைத் தெரியாதார் இலர். நற்குடியில் நல்ல துணைவருடன் பிறந்து, நன்முறையில் வாழ்க்கை நடத்தி, நற்புகழ் நிறீஇ, நன்னெறிப்பட்ட நல்லவர் செட்டியார் அவர்கள். அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஒன்றுமே அவர்கள் சிறப்பையும் புகழையும் என்றென்றும் நிலைபெறச் செய்யும். தமிழிசையில் ஈடுபட்டு, ஆங்காங்குத் தமிழிசை நிறீஇத் தம் மிசை பரப்பிய திறம் செட்டியார் அவர்கட்குரியது. பெற்ற பொருளை வைப்புழி வைத்துப் பலன்

கொண்ட பெருமை அவர்கட்கு நிரம்பவுண்டு. அவர்கள் கொடை வளத்தால் சீருற்றோங்கிய நிலையங்கள் பெரியனவும் சிறியனவு மாகப் பலப்பலவாம்.

வீரத் திரு. செட்டியார் அவர்கள் மறைவு அவர்கள் பெருமைக்கும் புகழுக்கும் நிறைவு தான். அவர்கள் வளர்த்த ஒவ்வொரு நிலையத்திற்கும் குறைவே, "கன்றும் கனியுதவும்" ஆதலால் வள்ளல் வழித் தோன்றிய பெருவள்ளல்களாகிய மக்கள் நற்றந்தையார் நல்வழி கடைபிடித்து, அவர்கள் வளர்த்த அற நிலையங்களை யெல்லாம் தொடர்ந்து புரந்து புகழ் கொள்வார்களாக.

தமிழிசை காத்த வள்ளல்

இராவ்சாகிப் K. கோதண்டபாணி பிள்ளை
கன்ட்ரோலர் ஆப் எமிகிரேஷன்

தமிழிசையைக் காத்த தனிப் பெரும் வள்ளல் இராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் மறைந்தார். தமிழிசையைக் காத்தது மட்டுமா? தமிழிசை வீழ்ந்திருந்த படுகுழியிலிருந்து அதனைப் பரிந்து எடுத்தார். எதிர்ப்பஞ்சாது அதனை நிலை நாட்டினார். தமிழ் மரபு கெடாது தமிழ் இசை என்றும் வளர்வதற்கும் வழி கோலினர். இவ்வள்ளல் அவர்களை நினைக்கும்போது இறைவன் வடநாட்டு இசைவல்லான் ஒருவனை முல்லைப் பண் (சாதாரி) பாடி வெருட்டிய திருவிளையாடல் நினைவுக்கு வருகின்றது. அன்று வேற்றிசை தமிழ்நாட்டில் பரவாது தானே முன்வந்து காத்தளித்தனன் இறைவன். இன்று, வேற்று மொழிப் பாடல்களை வெருட்டி ஓட்டினர் தமிழ் இசை வள்ளல்.

அவர் தம் வள்ளன்மையால் வளம் பெற்றது தமிழிசை ஒன்றுமட்டுமல்ல. தமிழ் மொழி வளம் பெற்றது; தமிழ் மக்கள் வளம் பெற்றனர்; தமிழ்நாடு வளம் பெற்றது. பண்டைய வழக்கம் போல் அன்னமிடுதல், சத்திரம் வைத்தல்; கோவிலெடுத்தல், குளங்கள் தோண்டல் இவற்றோடு நின்றிலர் நம் தனிப் பெரும் வள்ளல். வள்ளன்மைக்கே ஒரு புதுமுறை வகுத்தார்; அது செல்ல புது வழி கண்டார். இவர் வள்ளன்மை ஆக்க வழிகளில் சென்றது. மக்களுக்கும், நாட்டுக்கும் மிகப் பயன்படும் புது வழிகளைக் கண்டது. வள்ளன்மையைக் கல்வித் துறையில் திருப்பினர். பள்ளிகளமைத்தார். கல்லூரி எடுத்தார். ஆயிரக் கணக்கான தமிழ் மக்கள் பண்பட்டனர். பண்படுகின்றனர். இவர் தம் அறச்செயல்கள் பிறர் அறச் செயல் போன்று தோன்றி மறைவன அல்ல. இவை யாவும் தமிழ்நாடு உள்ளளவும், நிலைபெறுவன, நிலை பெறுமாறு அரண் கோலிச் சென்றனர்.

இவ்வள்ளல் அவர்கள் தோற்றம் கம்பீரமானது; மனத்தைக் கவர்வது—உயர்ந்த உருவம். அரசர் அவாவும் அமைப்பு; அறங் கிடந்த நெஞ்சம், அருள் ஒழுகும் கண்கள். அன்பும் இனிமையும் அமர்ந்த பேச்சு. இவர்தம் பருவுடல் மறைந்தது. அவர் தம் புகழுடல் வளர்கின்றது. என்றும் வளர்ந்துகொண்டே இருப்பது. 'இன்றுளார் நாளை மாள்வர், புகழுக்கும் இறுதியுண்டோ!'

வாழ்வாங்கு வாழ்ந்த பெருந்தகை

ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை

தமிழகத்தின் தவப்புதல்வரும், தனவணிக நகரத்தாரின் நடற்ற தலைவருமான டாக்டர் ராஜா ஸர் அண்ணாமலைச்செட்டியார் தமது பிறப்பிடமாகிய கானாடுகாத்தான் அரண்மனையில் நாளது ஜூன் மீ 15-ம் தேதி மாலை இறைவனடி நீழலில் கலந்து மறைந் தார்கள். அவர்களது மறைவு தமிழ் நாட்டிற்கும், இந்திய தேசத் திற்கும் அளவற்ற ஒரு பெரு நஷ்டமாகும். அன்னாரின் அருமைப் புதல்வர்களாகிய உயர்திரு. ராஜா ஸர் எம்.ஏ. முத்தையாச் செட்டி யார், உயர்திரு. இராமநாதன் செட்டியார், உயர்திரு. எம். ஏ. சிதம்பரம் செட்டியார் முதலியோருக்கும் அவர்களது குடும்பத் தாருக்கும் நமது மனமார்ந்த வருத்தத்தையும், ஆறுதலையும் தெரி வித்துக் கொள்கிறோம்.

கானாடுகாத்தான் பிரபலகுடும்பத்துமுத்தையாசெட்டியாரின் மூன்றுவது குமாரராக டாக்டர் ராஜா ஸர் அவர்கள் 1881 செப் டம்பர் 30-ம் நாள் பிறந்தார். இளம் பிராயம் முதற் கொண்டே தமக்கு வரப்போகும் பெரும் கண்ணியங்களுக்கு உரியவராக கல்வியிலும் வியாபாரத் தத்துவங்களிலும் மேம்பட்டு விளங்கினர். வியாபார முறைகளைத் தெரிந்து கொள்ளும் பொருட்டு 1910 முதல் இந்தியா, பர்மா, இலங்கை மலேயா நாடுகளல்லாது, இங்கி லாந்து, பெல்ஜியம், பிரான்ஸ்,ஜெர்மனிதேசங்களிலும் அமெரிக்கா தேசத்தையும் சுற்றுப் பிரயாணம் செய்தார். அச்சமயங்களில் பர்மாவில் இருந்த இந்தியர் நன்மைக்காகவும், பின்னர் இந்தியப் பிரெஞ்சுப் பகுதியிலுள்ள இந்தியர் நலத்திற்காகவும் அந்தந்த அர சாங்கத்தாருடன் பரிந்து பேசி வெற்றி பெற்றனர். அவரது ஒப்பற்ற அறிவையும், ஆற்றலையும், பாராட்டி அரசியலார் 1902-ல் "ராவ்பகதூர்" 1922-ல் "திவான் பகதூர்" 1923-ல் "ஸர்" 1929-ல் பரம்பரை "ராஜா" என்னும் பட்டங்களைவழங்கி கௌரவப்படுத்தி னார்கள். அவர்களுக்கு இந்தியா, இலங்கை, பர்மா, கொச்சின் சைனா இன்னும் கிழக்கிந்தியதேசங்கள் பலவற்றிலும் ஏராளமான வியாபாரத் தொடர்புகள் உள்ளன. அவர்கள் 1916-ல் சென்னைச் சட்டசபை அங்கத்தினராகவும், டெல்லி அரசாங்க மேல் சபை யாகிய "கவுன்சில் ஆப்ஸ்டேட்" அங்கத்தினராக மூன்று முறை

போட்டியின்றியும் இம்பீரியல் பாங்க் டயரக்டர், சென்னை பல் கலைக்கழகத்து நிரந்தர அங்கத்தினராகவும் இருந்தார்கள். அவர்களது ஆட்சித்திறமும், மதியுடைமையும் பிறமாகாணங்களில் உள்ள பெரியார்கள் யாவராலும் பாராட்டப் பெற்றவையாகும்.

ராஜா ஸர் ஒருபெரும்கோடீஸ்வரர். அவர்களதுவாழ்க்கையின் குறிக்கோள் அவர் தாம்மேற்கொண்ட (Strive Save and Serve) அதாவது "பொருளை உழைப்பால் தேடுக—தேடியதனை சேமிக்க, சேமிப்பைப் பணி செய்வதில் ஈடு படுத்துக" என்ற மூன்று ஆங்கில வார்த்தைகளில் அடங்கியதென்னலாம். அதற்கேற்ப தனது சலிப்பற்ற உழைப்பால் சேர்த்த பொருட் குவியலைத் தமிழ் மக்களுக்கு உதவும் பள்ளிக்கூடங்கள், கலாசாலைகள், வைத்தியசாலைகள், கோவில்கள், ஊருணிகள் முதலிய ஸ்தாபனங்களுக்கு இலட்சக் கணக்காகப் பொருளை வரையின்றிக் கொடுத்தார். இந்த நன்கொடைகளால், பல தருமங்கள் இன்னும் தமிழ் நாட்டிலேயல்லாது மலேயா, செய்கோன் முதலிய இடங்களிலும் நடைபெற்று வருகின்றன. "திருவுடை மன்னர் பணி திருமாலின் பணி" என்னும் குடி அறத்தின்படி திருச்சிற்றம்பல வாணரது திருக் கோயிலுக்குப் பொன் வேய்ந்து புகழ் கொண்டனர் அவர்களுடைய அருமைத் தந்தையார். இவர் தாமும், தில்லை மன்றில், தில்லைக் கூத்தனையும் கோவிந்தராசனையும் ஒருங்கிருந்து காணத் தகுந்த மணி மண்டபத்தை அணியுற இயற்றி சல்லையில் புகழ் பெற்றனர். இவர்கள் இத்தகைய அறத் துறையில் பணியியற்றிய பொருள் ஒன்றரைக் கோடிக்கு மேல் மதிப்பிடலாகும்.

ராஜா சர் ஒரு முத்தமிழ் வள்ளல். தமது தாயகமாகிய தமிழகத்தும், தாய் மொழியாகிய தமிழினிடத்தும், அவருக்கு ஒரு இணையில்லாப் பற்று விளங்கியது. அந்த அன்புதான் தில்லையம் பதியில், மீனாட்சி கல்லூரியை நிறுவச் செய்தது. அதனை மீண்டும் 1939-ல், சுமார் 30 லட்சம் ரூபா செலவில், தில்லை வெளியில் தம் பெயரால் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை (Annamalai Univer-city) தாபித்தனர். அப்போது ஆந்திரருக்கும் கன்னடருக்கும் மாத்திரமே பல்கலைக் கழகங்கள் ஏற்பட்டிருந்தன. தமிழருக்கென ஒன்று இல்லாதிருந்ததால், தமிழனது புகழ் உலகின் கண் என்றும் நிலைபெற வேண்டுமெனவும் எண்ணினார்கள். கல்வித்துறையில், இஃதல்லாமலும், மதுரையில் உள்ள அமெரிக்கன் கல்லூரிக்கும், மதுரைக் கல்லூரிக்கும் அவர்கள் நல்கிய கொடைகள் பெருநிதியாகும். மற்றும், தமிழ்க் கலைக் களஞ்சியத்திற்கு, ரூபா ஐயாயிரமும்; பல்கலைக் கழகத்துத் தமிழிசை வளர்ச்சிக்கென ரூபாய் பதினையாயிரமும் நன்கொடை கொடுத்துள்ளார்கள்.

இன்னும் நமது செட்டிநாட்டரசர் ஒரு இலக்கிய ரசிகர். அவர்களது தமிழ் அன்பும் ஆர்வமும் அளவிடற்கு அரியதாகும். 'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞான சம்பந்தன் பணியேற்று தமிழகத்தில் தமிழுக்கும், தமிழிசைக்கும் செய்துள்ள தொண்டு தமிழும், தமிழிசையும் உள்ளளவும் நிலைத்து நிற்கும். தமிழ் இசை தன் நிலை கெட்டுத் தன் தனித் தன்மை கெட்டிருந்ததை அவரே முதற் கண்டு மனம் புழுங்கினர். அதனை நீக்கவும், அதற்கான பல்வகை எதிர்ப்புக்களிடையேயும் அஞ்சாது ஊக்கத்துடன் தனது நுண்ணிய அறிவால் ஆற்றிய தொண்டினுல் தமிழ் இசை மாசு நீங்கி புத்துயிர் பெறலாயிற்று. இதற்காக 1943-ல் சென்னைத் தமிழ் இசைச் சங்கத்தைத் தோற்றுவித்தார்கள். அதன் காரணமாக இதுபோது தமிழ் நாடெங்கும் பெரும்பாலும் தமிழ் இசைப் பாடல்களே பாடவும், அதற்குத் துணையாக பழையனவும் புதியனவுமாகிய ஆயிரக்கணக்கான தமிழிசைப் பாடல்களை பல நூல் வடிவாக வெளியிட்டும், அண்ணமலை பல்கலைக் கழக இசைக் கல்லூரி வாயிலாக நூற்றுக்கணக்கான மாணவ மாணவிகள் தமிழ் இசையும், இசைக் கருவிகளும் பயிலவுஞ் செய்தும், பிறபல தமிழிசைச் சங்கங்களுக்கும் ஊக்கங் காட்டிய பெருந்திறனும் என்றும் போற்றற்குரியதாகும்.

இவ்வாருக, செயற்கரிய செய்த பெரியார், இறப்பினும், என்றும் இறவாமையை எய்தியவராவர்.

ஒருவன திரண்டியாக்கை யூன்பயி னரம்பின் யாத்த
வுருவமும் புகழு மென்ருங் கவற்றினூழ் காத்து வந்து
மருவிய வுருவமிங்கே மறைந்து போமற்ற யாக்கை
திருவமர்ந் துலகமேத்தச் சிறந்து பின்னிற்கு மன்றே

— சூளாமணி

அவர்களது புகழுடம்பு என்றும் எப்போதும் தமிழ் நாடெங்கும் போற்றப் பெறும்—அவர்களது தூய ஆன்மா பிறவித் துன்பத்தையொழித்து இறைவனடியில் என்றும் இன்புற்று நிலை பெறுவதாக. அவர்களது செல்வத் திருமகனுர்கள் அவ்வறம் வளர்த்த அண்ணலின் பூரண ஆசி பெற்றும் அவர்களது செவ்வடி யின் பற்றியும், "தந்தையறிவு மகனறிவு" என்பது போல அவர்கள் தந்தையார் வழிநின்று தமிழ் நாட்டாருக்கும் தமிழ் மொழிக்கும் பணி புரிவார்களாக. வாழ்க செட்டிநாட்டரசர்! ஓங்குக அவர் தம் அருட்பணிகள்!

உலகெலாம் போற்றும் உத்தம வள்ளல்,
தமிழ் நாடுபெற்ற தனிப் பெருஞ் செல்வர்,
தனவணிகர் குலமணி

ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள்

மீது பாடப் பெற்ற

இரங்கற் பாக்கள்.

(காளஹஸ்தி நாதன் எழுதியவை)

(1) வானும் புவியும் புகழ்ந்தேத்தும்
வளஞ்சார் பாண்டி நாடு வந்தே
வதியும் மகுட தனவணிகர்
வணங்கும் இளசைப் பிரிவிலருள்

ஞானச் செல்வர் எனவியந்தே
ஞாலம் போற்றும் பட்டினத்தார்
நலமார் மரபின் மணிவிளக்காம்
நந்தாப் புகழ்சேர் கொடைவள்ளல்

ஆனைன் றிவரும் அரனும்
அழகார் தில்லைப் பதிக்கருகில்
அழியா நிதியாங் கலைக்கழகம்
அளித்த செல்வன் தமிழகத்தார்

தேனின் இனிய தமிழிசையாந்
தெவிட்டா அமுதைச் சுவைத்தருந்தத்
தேர்ந்தோர் சங்கம் நிறுவியஓர்
தீரன் அண்ணா மலையரசே.

(2) இளமைப் பருவ முதலேதன்
இனிய தந்தைக் கருகிலமர்ந்
தெய்ப்பின் றுறுதி யூக்கமுடன்
என்றும் உழைக்குந் திறமையினால்

வளமை பெருக வாலிபத்தில்
வாரி கடந்தும் பலநாட்டில்
வங்கித் தொழிலில் வாணிகத்தில்
வளர்மா நிதியிற் சிறப்புற்றான்

குளமுந் தெருவுஞ் சாலையும்ஏர்
குலவு மாட மாளிகையுங்
குமரன் தாதை யாலயமும்
குறைவற் றோங்குந் தன்நகரும்

அளகைப் பதிபோல் அமைத்தானென்
றவனி போற்றும் ராஜா ஸர்
அண்ணு மலையாம் அருநிதியை
அந்தோ! காலன் கவர்ந்தனனே!

(3) உலகிற் சலியாக் கற்பகத்தின்
உறுப்பென் றுயர்ந்தோர் உரைத்தவெலாம்
ஒருங்கே அமைந்த பெருஞ்சிறப்பால்
உயர்ந்தோங் கண்ணு மலைவள்ளல்

அலகில் செல்வம் செழித்தோங்க
அழியா முயற்சி யறிவாற்றல்
அமையப் பெற்றோன் அறச்செயல்கள்
ஆய்ந்து தேர்ந்து பலபுரிந்தான்

பலவன் டமிழோர் பாராட்டிப்
பாடுஞ் சிறப்பால் பாரெல்லாம்
பரவி யோங்கும் புகழ்படைத்தான்
பண்ணார் தமிழின் இசைவளர்த்தான்

நிலவார் வேணி நிமலனடி
நித்தம் பரவி வினைவலியால்
நிலையா உடலை நீத்தென்றும்
நீடின் பில்லஞ் சேர்ந்தனனே!

தமிழிசைச் சங்கம்

தமிழ் இசைக் கல்லூரி, சென்னை, 1.

நமது இசைக் கல்லூரி கோடை விடுமுறைக்குப்பின் ஜூன் மீ 3-ம் நாள் தொடங்கியுள்ளது. ஓரளவு இசை ஞானமுள்ள மாணவ மாணவிகட்கு தகுந்த ஆசிரியர்களைக் கொண்டு, ஆரம்ப வகுப்பு, இசைச் செல்வம், இசை மணி என்ற மூன்று வகுப்புக்கள் இவ்வாண்டு தொடக்க முதல் சங்க நிலையமாகிய 8/9. சிங்கண்ண நாயக்கன் தெரு, ஜார்ஜ் டவுன்—மாளிகையில் நடைபெற்று வருகிறது. மேற்படி வகுப்புகளில் சேர விரும்புவோர்கள் சங்கத்தில் மற்ற விபரங்களைத் தெரிந்து கொள்ளலாம்.

வள்ளல் அண்ணாமலை அரசர்

பண்டித வித்வான். லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார்
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

செட்டி நாட்டு ராஜா சர் மு. அ. அண்ணாமலைச் செட்டியார் அவர்களை நினைக்கும் போதெல்லாம் அவர்களின் ஆழ்ந்தகன்ற நுண்ணறிவும், எச்செயலையும் எண்ணித் துணிந்து செய்து எண்ணியாங்கு நிறைவேற்றுந் திண்மையும், விடாமுயற்சியும், தாளாற்றித் தந்த நிறை செல்வமும், பெருவண்மையும், செயற்கருந் தொண்டும், ஆட்சித்திறனும், அன்பு. அருள் காட்சிக்கெளிமை முதலிய பிற உயர்குணங்களும் நம்முன் தோன்றுவனவாம்.

அரசர் அவர்களின் வண்மைப் பயனாகப் பல்வகை அறங்கள் விளங்குவதை எண்ணும்போது '' மறத்தினா லாகிய மன்னரைப் போலாது, அறத்தினாலாய அரசே'' என்று நான் இவர்களைப்பற்றி ஒரு முறை பாடியது நினைவில் வருகிறது, அண்ணாமலைப் பல்கலைக் கழகம் இவர்களின் பெருவண்மைக்கும் பெரும்புகழுக்குஞ் சிறந்ததோரெடுத்துக்காட்டாகத் திகழ்கின்றது. இக் கலைக்கோயிலில் தமிழ்ச் செல்வி தனிச்சிறப்புற்று வளர்வது அரசரவர்களின் தாய்மொழிப்பற்றைப் புலப்படுத்துவதாகும். இவர்களையன்றி வேறு எந்த இந்தியருக்கு ஒருவர் பல்கலைக்கழகம் நிறுவலாம் என்ற எண்ணந் தோன்றியது?

மறைக்கப்பட்டிருந்த இசைத் தமிழைத் தோற்றுவித்து வளர்க்க வேண்டும் என்ற எண்ணம் நம் அண்ணாமலை வள்ளலுக்கே முதன் முதலில் தோன்றியது. இத்தகைய செயல்களிலிருந்து இவர்கள் உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளும் இயல்புடையார் என்பது தெள்ளிதிற் புலனாகும். இசைத்தமிழுக்கு இவர்கள் செய்த அரும் பெருந் தொண்டுகளைத் தமிழுலகம் நன்கறியும். இத்தொண்டுகளை நினைக்குப்போது '' அஞ்சாமை யீகை அறிவூக்க மிந்நான்கும், எஞ்சாமை வேந்தற் கியல்பு'' என்னுங் குறள் நினைவில் வருகின்றது. இசைத் தமிழ் வளர்ச்சிக்குத் தடையாக நேர்ந்த பல்வகை எதிர்ப்புக்களையும் அஞ்சாமற் களைந்தார்கள். நூறாயிரக் கணக்கான பெரும் பொருளை இசை வளர்ச்சிக்காக வாரிவாரி வழங்கினார்கள். நெடுங்காலமாக மக்கள் உள்ளத்திற் பதிந்திருக்கும் ஒரு கருத்தை மாற்றிப் புத்துணர்ச்சியை ஊட்டுவது பேரறிஞர்க்கன்றி இயலாது ; அத்தகைய பேரறிவு இவர்கள் பால் அமைந்திருந்தமையால்தான் தமிழ் மக்கள் உள்ளத்திற் பதிந்திருந்த பிறமொழி இசை உணர்ச்சியைப் பெயர்த்தெடுத்து இசைத் தமிழ் உணர்ச்சியைப் பரப்ப முடிந்தது. ஐந்தாண்டுகளில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலிருந்து 20 தமிழிசை நூல்கள் வெளிவந்திருப்பதிலிருந்து அரசரவர்கள் இசைத் தமிழ் வளர்ச்சியில் எத்துணை

ஊக்கமும் ஆதரவுங் காட்டியுள்ளார்கள் என்பது எவரும் எளிதில் உணர்தற்குரியது. இசை வளர்ச்சிபற்றிய ஆலோசனைகளிலும், அதற்காக நடந்த பல மாநாடுகளிலும், கழகங்கள் கல்லூரிகளின் நிகழ்ச்சிகளிலும், வள்ளலவர்களின் பொன்போன்ற நேரம் செல வானதைக் கண்டவர்கள், இவர்களின் இசைத் தமிழ் வளர்ச்சிப் பற்றின் எல்லையை ஒருவாறு ஊகித்தறிதல் கூடுமேயன்றி அதற்கு ஒருவமை கூறுதல் இயலாது. இவர்களின் கடைசி எண்ணமும் அதுவாகவே இருந்தது. இவர்கட்கு மறுபிறப்பு உண்டானல், ஒருவர் இறக்குநிலையில் எண்ணிய எண்ணம் மறுபிறப்பில் நிறை வேறும் என்னும் உண்மைக்கேற்ப மறுபிறப்பிலும் இவர்கள் ஒரு சிறந்த இசைத்தமிழ்ப் புரவலராகவே விளங்குவார்களென்பது துணிபு. இசைத்தமிழ் இவர்களை மறக்கமாட்டாது. இவர்கள் இசைத்தமிழுக்குச் செய்த பெருந்தொண்டுகளைப் பாடல்களில் அமைத்து அவைகளை ஒவ்வொரு இசையரங்கிலும் பாடுதல் இசை வாணர் கடனாகும்.

கொடைத்திறம் இவர்கள்பால் அமைந்ததேயன்றிக் கொடை மடம் இவர்கள்பால் அமையவில்லை. இவர்கள் தம் குலத்துக்குச் செய்த நன்மைகள்பல. தம் குலநலத்துக்காக ஒருமுறை லண்டன் மாநகரஞ் சென்று மன்னர் பெருமானைக் கண்டு வந்தார்கள். இவர்களின் பலவகையான சிறப்பியல்புகளை நினைந்து பற்பல பதவி களும், பட்டங்களும் இவர்களை நாடிவந்தடைந்து பெருமை பெற்றன.

இவர்களைக் குறித்துப் பண்டிதமணி அவர்கள் பாடிய

"திருவுக்கு ஒருவன் கொடைக்குஒருவன் தீர நினைந்து துணிந்துபுரி
செயலுக்கு ஒருவன் வாழ்க்கைநலச் சிறப்புக்கு ஒருவன் புகழ்க்கு [ஒருவன்
"உருவுக்கு ஒருவன் ஒப்புரவி னோங்கும் அறத்திற்கு ஒருவன்என
உரைப்பர் உலகர் இவ்வனைத்தும் ஒருங்கு காண்டற்கு உவமையி [லாத்
தருவுக்கு உரிய பெருவண்மை சான்ற அண்ணு மலையரசே
தக்கோன் எனநல் அறிஞரெலாஞ் சாற்றும் பெருமை தகப்படைந் [தோன்
கருவிற் பொலியுந் திருவுடையான்"

என்னும் பாடற்பகுதி மிகவும் பொருத்தமாகும்.

மக்கள் தம் வாழ்க்கையிற் பெறக்கூடிய எல்லாச் செல்வங் களையும் இவர்கள் பெற்றுஅநுபவித்துவிட்டார்கள். மேலும் இவர் களின் குமாரர்களாகிய உயர்திரு. குமாரராஜா சர் முத்தையசெட் டியாரவர்கள், உயர்திரு. இராமநாதன் செட்டியாரவர்கள், உயர் திரு. சிதம்பரஞ் செட்டியாரவர்கள் ஆகியோர் எல்லாவகையிலுஞ்

சிறந்து விளங்குவதையுங்கண்டு மகிழ்ந்தார்கள். ஆதலால் வாழ்க்கையிற் பெறக்கடவனவெல்லாம் பெற்று விட்டார்கள் என்பதையும், மக்கள் யாக்கை என்றும் அழியும் இயல்புடையது என்பதையும் நினைத்து ஒருவாறு நாம் ஆறுதலடைய முயன்ருலும், இன்னும் பல ஆண்டுகள் இவர்கள் வாழ்ந்தால் சிறப்பாகத் தமிழருக்கும் பொதுவாக எல்லோருக்கும் இன்னும் பல செயற்கரிய நன்மைகள் செய்வார்களே என்பதை எண்ணி எண்ணி ஏங்கி ஆறுதல் பெற இயலாதவர்களாயிருக்கின்ரும். இவர்கள் பிரிவு நமக்கு ஈடுசெய்ய முடியாத ஒரு பேரிழப்பேயாகும். இவர்களின் பூதவுடல் மறையினும் புகழுடல் இவ்வுலகம் உள்ள அளவும் தமிழ் உள்ள அளவும் மறையாது நின்று நிலைபெறும்.

மற்றையோருக்கு வழிகாட்டியாக இவர்களின் வரலாறு விரிவாக எழுதப்பட்டு எல்லோராலும் படிக்கப்பெறுதல் வேண்டும். இவர்களின் உருவச் சிலையை ஆங்காங்கு நாட்டி நன்றி மறவா நல்லியல்பைப் புலப்படுத்துதல் நம் கடமையாகும்.

செட்டி நாட்டு அரசர்

சி. பன்னிருகைப் பெருமாள் முதலியார், எம்.ஏ., பி.எல்.,
பேராசிரியர் : திருவாங்கூர் பல்கலைக் கழகம்

செட்டிநாட்டு அரசர் மறைவு முக்கியமாகத்தமிழ் நாட்டுக்கு ஒரு தாங்க முடியாத நஷ்டம் என்பதை யாவரும் ஒப்புக்கொள்வர். அவர்களால் தமிழ் நாட்டுக்கும் தமிழ் மக்களுக்கும் உண்டான நன்மைகள் அளவிடற்பாலனவல்ல. அண்ணமலைப் பல்கலைக் கழகத்தைநிறுவித் தமிழ் மக்கள் மிகுதியாகக் கல்லூரிப் படிப்புப் பெறச் செய்தனர். தவிரவும், இசைக்கல்லூரி ஒன்றை அண்ணமலை நகரத்தில் நிறுவி இசை மணம் குன்றி இருந்த தமிழ் மக்களுக்கு இசையில் விருப்பம் உண்டாகுமாறு செய்தனர். இன்றும், அவர்கள் தமிழ் இசைச் சங்கத்தை நிறுவின பெரியாருள் ஒருவர். சாகும் நிலையில் இருந்த தமிழ் இசைக்கு மேற் குறித்த சங்கம் இப்பொழுது திரும்பவும் உயிர் கொடுத்து வருகின்றது.

இராஜா அண்ணமலைச் செட்டியார் அவர்கள் காலத்திற்கு முன்னர், நகரத்தார்கள் புதுக்கோவில்கள் கட்டுவதிலும் பழைய கோவில்களைப் புதுப்பித்தலிலும், குளங்கள் வெட்டுவதிலும், அன்ன சத்திரங்கள் கட்டுவதிலும் ஏராளமான பொருளைச் செலவு செய்து வந்தனர். செட்டி நாட்டு அரசர் புது முறையில் தருமம் செய்ய வழிகாட்டினர்கள். அதன் பயனுக, இன்று டாக்டர் அழகப்ப செட்டியார் போன்ற பெரியார் புதுக் கல்லூரிகள் நிறுவுவதிலும் ஆராய்ச்சிக் கூடங்கள் (Research Institute) ஏற்படுத்துவதிலும் பொருளைச் செலவு செய்யத் தொடங்கி இருக்கின்றனர். மேற்கூறப்பட்டுள்ள அருஞ் செயல்களால் தமிழ்

நாட்டுக்கு உண்டாகக்கூடிய நன்மைகள் மிகப்பல. இந்த நன்மைகளுக்கு அடிகோலியவர் செட்டி நாட்டு மன்னர் என்பது மிகையாகாது.

இராஜா செட்டியார் அவர்களை இரண்டு இடங்களில் சந்தித்துச் சற்று உரையாடி இருக்கிறேன். அவர்கள் கம்பீரமான தோற்றமுடையவர்கள். அழகாகப் பேசும் வன்மை பெற்றவர்கள்; ஆங்கிலத்தில் 'Manners' என்று சொல்லக்கூடிய ஒழுக்க முறைகளை அவர்களிடத்தில் இருந்துதான் கற்கவேண்டும். பண்டைத் தமிழ் நாடு விருந்தோம்பலில் சிறப்படைந்திருந்தது; பாராட்டக்கூடிய முறையில் விருந்தினர்களை ஓம்பி வந்தார்கள். செட்டிநாட்டு வள்ளல். மிகச் சிறிய நேரம் அவர்களுடன் உரையாடினவர்களும் அவர்களிடம் விடைபெற்றுச் செல்லும் பொழுது அவர்கள் கூரிய அறிவுடையவர் என்ற எண்ணத்துடனேயே போவார்கள்.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த ஒரு தமிழ்ப் பெரியார் தற்சமயம் மறைந்தது தமிழ் நாட்டுக்கு ஒரு பெரும் பாக்கியக் குறைவாகும். இன்னும் சில காலம் அவர்கள் வாழ்ந்திருப்பார்களானால் தமிழ் நாடும் தமிழ் மக்களும் அளவில்லாத நன்மைகளை அடைந்திருப்பார்கள். ஆனால் கடவுள் செயலைக் குறை சொல்வதற்கு நமக்கு என்ன உரிமை உண்டு? அவர்கள் தோன்றாத் துணையாக இருந்து பொதுவாக உலகத்துக்கே நன்மை செய்யலாம்.

தன்னேரிலாத் தமிழ் வள்ளல்

சி. உருத்திரபதி, எம். ஏ., மத்தியக் கல்லூரி, பெங்களூர்.

தன்னேரில்லாத் தலைவர், கொடையிற் சிறந்த கோமான், தமிழ் வளர்த்த தனிப் பெரும் வள்ளல், தண்டமிழ் நாட்டின் தவப்பயனாய், தனவணிகர் குடியில் தோன்றி தமிழ் நாட்டின் புகழ், இமிழ்கடல் வரைப்பில் எங்கணும் பரவ இசைநாட்டி வாழ்ந்த எம்பலகலைக் கழகம் நிறுவிய வேந்தர் மறைந்தார். எனினும் அவர்தம் புகழுடம்பு மறைபவில்லை.

"தோன்றிற் புகழொடு தோன்றுக; அஃதிலார்
தோன்றலில் தோன்றாமை நன்று"

என்ற வள்ளுவர் வாய்மொழிக்கு இலக்கியமாய்த் திகழ்ந்தார். செல்வர்குடியில் தோன்றி அளவற்ற பொருளை உலையா உழைப்பாலும், குன்றாத ஊக்கத்தாலும் ஈட்டினார். அச்செல்வத்தை தானே அனுபவித்தாரா? பிறர்க்குப் பயன் படுத்தாதிருந்தாரா? இல்லை. இல்லை. சிவன் தந்த செல்வமென்றுணர்ந்தார். ஆகவே அறவழி நின்று பல அறங்கள் புரிந்தார். தலையாய அறம் மக்

களின் அறியாமை யிருளைப் போக்கும் கல்வியை யளித்தலே யென்றறிந்தார். கலைவடிவாய் நின்று தாண்டவம் புரியவல்ல தம்பிரானுய நடராசப் பெருமான் கோயில் கொண்டருளிய தில்லை யின் எல்லையில், திருவேட்களத்தில், ஈடும் எடுப்புமற்ற பல்கலைக் கழகம் நிறுவினர். பல்லாயிர மாணவர், மாணவியர்கள் பலர் கலை கள் பயின்று அண்ணுமலை யரசரை வாயார வாழ்த்தி நாட்டின் பல பாகங்களில் மக்கட்பணி புரிந்து வருகின்றனர். அண்ணுமலைப் பல்கலைக் கழகப் பட்டதாரி என்ருல் அவருக்கொரு தனி மதிப்பு. அப்பல்கலைக் கழகப் பட்டதாரிகள் சொல்வன்மையிலும் எழுத்து வன்மையிலும் இணையற்று விளங்குகின்றனர். இத்தகைய பல் கலைக் கழகம் இந்தியாவில் வேறெங்கும் இருப்பதாகத் தெரிய வில்லை. காசிப் பல்கலைக்கழகத்தை இதற்கு ஒருவாறு ஒப்பிடலாம். ஆக்ஸ்போர்டு, காம்பிரிட்சு, முதலிய இடங்களில் உள்ள கலைக் கழகங்களை இதற்கு ஒப்பிடலாம். இப்படிப்பட்ட பல்கலைக் கழ கத்தை தமிழ் நாட்டிற்களித்து தமிழுக்குச் சிறந்த இடமளித்தார்.

சிவபெருமான், மூவரோதிய தேவாரம், மணிவாசகப் பெருந் தகையாரின் திருவாசகம், முதலிய தமிழ்ப் பாசுரங்களில் நனி விருப்பமுள்ளவன் என்பதை யுணர்ந்த செட்டி நாட்டரசர் தமிழிசையியக்கம் ஆரம்பித்து இயற்றமிழிசை வளர்த்த தோடமை யாது இசைத்தமிழையும் வளர்த்து வந்தார். தமிழையே தாய் மொழியாகக் கொண்டாலும், தாய்க்கொலை சால்புடைத்தென் பார் போல், தமிழைப் புறக்கணித்து, ஏனைய மொழிகளைப் போற் றும் ஒரு குழுவினர் வழிநின்றியங்கும் தமிழுலகில் செட்டிநாட்டு வள்ளல் தாய்மொழி பேண மடிதற்று முந்துற்றது இறைவன் திருவருளேயாகும்.

மன்னர் என்ற பட்டத்திற்கேற்ப, அஞ்சாமை, அறிவு, ஊக்கம் முதலிய நற்பண்புகள் ஒருங்கே அமையப் பெற்றிருந் தமையால், பலர் நின்று தமிழிசையியக்கத்தை எதிர்த்துப் போரா டினும் அஞ்சாது போர் புரிந்து எண்ணிய எண்ணியாங்கு தமிழி சைச் சங்கத்தை நிலை நாட்டி, தமிழ் நாடெங்கும் ஒரு புத்துணர்ச் சியை உண்டாக்கினர். சொல்லும் பொருளும்போல விளங்கும் பார்வதி பரமசிவனை வணங்குவதாக காளிதாசன் கூறுகின்ருர். ஆகவே பொருள் விளங்காத சொல்லால் பயனில்லை என்ருகின் றது. பரமசிவன் சக்தியாகிய பார்வதியின்றி தனித்து அருள் புரிவ தில்லை. அதுபோல, பொருள் விளங்காத பாசுரத்தால் பயனில்லை என்பதை யுணர்ந்த செட்டிநாட்டுக் கோமான், தமிழ் நாட்டில் தமிழ்ப் பாடல்கள் பாடப் பெறவேண்டும் என்று வற்புறுத்

தினர். அவர் செய்த பேருபகாரங்களைத் தமிழ் மக்கள் என்றும் மறக்க முடியாது. இன்று சாந்தி நிகேதனத்தில் தமிழ் மணம் கமழ்வது நமது மாபெரும் வள்ளல் செட்டி நாட்டரசரால்தான். சுமார் ஈராயிரம் தமிழ்ச் சுவடிகள் அதற்குத் தானமாகக் கொடுத்தார். அவர் புரியாத அறமில்லை. எண்ணிலா அறங்கள் முகமலர்ந்து அகமலர்ந்து புரிந்து பொன்றுங்கால் பொன்றாத்துணை வாய்க்கப் பெற்று அறவாழி அந்தணன்தாள் சேர்ந்தார் என்றும் அவனடி நீழலில் இன்புற்று விளங்குவாராக. அவரது திருக்குமாரருள் ஒருவராய் விளங்கும் இராஜா சர். முத்தையா செட்டியார் அவர்கள் தந்தை வழி நின்று தமிழையும் தமிழிசையும் புரப்பார்களாக.

'வாழிய தமிழ்மொழி! வாழிய தமிழிசை!!

"பண்புடை வள்ளல்"

யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

ஒரு பாடகர் இனிமையாகப் பாடுகிறார். எல்லாரும் தலையாட்டுகின்றனர். "நன்று நன்று!" என்று கைதட்டிச் செல்லுகின்றனர். ஆனால் அந்தக் கூட்டத்தில் ஒருவர் எழுந்து "பாட்டு நன்றாயிருக்கிறது. இந்த மோதரத்தை வைத்துக் கொள்ளுங்கள்" என்று தருகிறார். "ஆஹா! இப்படியல்லவா இசைப் புலவர்களை மதிக்க வேண்டும்" என்று சபை மெச்சுகிறது. சில இசைமாணவர் வந்து இனிதாகப் பாடுகின்றனர். பாட்டு முடிவில் "நன்றாயிருக்கிறது இப்படியே இசைப்பயிற்சி செய்து முன்னேறுங்கள்" என்றொருவர் ஆளுக்கு இருபது ரூபா தந்து மகிழ்கிறார். "அடடா என்ன வண்மை!" என்று மாணவர் வியந்து போற்றுகிறார்கள். நாம் ஒரு செல்வக்கனவானுக்குக் கடிதம் எழுதுகிறோம்; பதில் எளிதில் வராது. வந்தாலும் காரியதரிசி இரண்டு வார்த்தையுடன் கையைக் கழுவிவிடுவார். ஆனால் மேற்சொன்ன செல்வர் நாம் கடிதம் எழுதிய மூன்றாநாள் சுருக்க விளக்கமாக நமக்கு வேண்டி கேள்விக்குப் பளிச்சென்று பதில் எழுதுவார்.

இதற்குத்தான் "விதரணை தெரிவது" என்பது. இப்படி விதரணை தெரிந்த ஒரு பெருஞ் செவ்வர் நமது ராஜா ஸர் அண்ணாமலை செட்டியார். அவரை நான் காலம் சென்றதாகச் சொல்லமாட்டேன். அவர் தமது வண்மையால் காலத்தை வென்று நின்று நிலவுகிறார். அவர் பேச்சு செயல் எழுத்து நடை உடைபாவனைகளெல்லாமே மற்ற மனிதருக்கு உதாரணமாயிருந்தன. அவர் படிக்காமலே படித்தவர்; உலகை நன்றாயறிந்தவர். அவரை யாரும் ஏமாற்றி முடியாது. ஆட்களின் தன்மையறிந்து மதிப்பவர். நன்றாகச் சம்பாதிக்கும் உழைப்பாளி; தமிழகத்தின் குபேரர். சேர்த்த

பொருளை வகுத்துப் பொதுநலம் செய்யும் புண்ணியர். ஈட்டல் காத்தல் வகுத்தல் என்ற மூன்று கொள்கைகளுடன் வாழ்ந்த திருவுடையாளர்.

இதனை இதனால் இவன்செய்யும் என்றெண்ணி
அதனை அவன்கண் விடல்

என்னும் குறளின் விளக்கம் அவரே.

அவர் நாளைக்குப் பதினேழுமணிநேரம் உழைத்தார். இன்று வேலையை நாளை மிச்சம் வைக்காமல் முடித்தே உறங்கினார்.

உழைத்துப் பொருளீட்டி
ஓங்குநலஞ் செய்து
தழைப்பது செல்வத் தகை

என்பதில் அவர் வாழ்க்கை அடங்கும்.

பச்சையப்பருக்கும் பாஸ்கரசேதுபதிக்கும் பிறகு சிறந்த கொடையாளி நமது வள்ளல் அரசர். அவர் வண்மை எத்தனையோ அறநிலையங்களாக விளங்குகிறது. எனினும் அண்ணாமலை நகரை யும் இசைக் கல்லூரியையும் கண்டால் இதோ நமது ராஜா அண்ணாமலை செட்டியார் என்று காட்டத் தோன்றும். அவர் மூளையும் உயிரும் அண்ணாமலை நகரில் துடிக்கின்றன.

தமிழிசைக் கொடியை வளர்த்த வள்ளல் நமது ராஜா. அதை வாய்ப்பாகக் கொண்டு எனக்கு அவர் செய்த உதவியை நான் என்றும் மறக்க முடியாது. என் இசைப்பாடல்களுக்கு அந்த வள்ளல் ஆக்கமும் ஊக்கமும் அளித்தார். நான் யாரையும் பொருள் இரப்பதில்லை. ஆயினும் ராஜா ஸர் வலுவில் எனது இசை நூல்கள் அச்சேற வேண்டிய பொருட்செழிப்பைத் தந்தார். அந்தப் பொருளாலேதான் சிதம்பரகீதம், தேவகானம் முதலிய பல நூல்கள் வெளிவந்தன. இந்த உதவியை நான் என்றென்றும் மறக்க முடியாது. ராஜா ஸர் நான் எப்போது கடிதம் போட்டா லும் உடனே பதில் எழுதி என்னை ஊக்கினார். எனக்கு அரிய யோசனைகளைச் சொன்னார். உலகம் இப்படி தாங்கள் இப்படி இருக்கவேண்டும் என்று விளக்கினார். இசைப்புலவர்களை அனுப்பி என் இசைவாணிக்குச் சரியான வேலை கொடுத்தார். எனக் கொரு நல்ல ஆசிரமம் கட்டிவைக்கவும் முயன்றார். என்னுள் யோகத்தில் உறங்கிக் கிடந்த இசையறிவு ராஜா ஸர் தந்த ஊக்கத் தாலும் ஆக்கத்தாலும் உற்றெழுந்து தமிழகத்திற்குப் பயனானது. இன்று கீர்த்தனாஞ்ஜலி, நவரஸ நடனாஞ்ஜலி, கவிக்கனவுகள் புதுயுகப் பாட்டு, குழந்தைப் பாட்டு, நாட்டுப் பாட்டு இராகமா லிகை முதலிய பாடல்கள் வெளிவந்து தமிழகத்தில் உலாவுகின்

றன. நண்பர் அவற்றைப்போற்றி எழுதும்போதெல்லாம் நான் நமது வள்ளல் அரசரை நினைப்பது வழக்கம்.

எல்லையிற் செல்வங் கண்டான்
    ஈகையிற் பெருமை கண்டான்
பல்கலைக் கழகங் கண்டான்
    பாரெலாம் புகழக் கண்டான்
தில்லை நா யகனும் அன்னோன்
    செய்தமிழ்ப் பணியைக் கண்டு
மல்கிய உவகை பொங்க
    மாநடம் புரிகென் றனே.

நிலைபெறு தருமஞ் செய்த
    நிகரிலாந் தமிழன் அண்ணா
மலையெனும் பெயரான்; செம்பொன்
    மலையென மாண்பு பெற்றான்;
கலைகளை வளர்த்தான்; பொங்கும்
    கனிதமிழ் இசையைக் காத்தான்
அலைகடல் உலக மெல்லாம்
    அவனிசை விளங்கு மாலோ.

தமிழிசை வளர்த்த மன்னர்.

டி. எம். தெய்வசிகாமணி ஆச்சாரியார், F. R. S. A.லண்டன்

செல்வச் செட்டி நாட்டரசர் டாக்டர். ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் தமது வாழ்நாளில் பலப்பட்ட துறைகளில் வெற்றி கண்ட கண்ணியராவார். அவைகள் ஒவ்வொன்றையும் குறித்து எழுதல் சுலப சாத்தியமன்று. அவை மிகப் பெரிய நூற்களாக விரியும். எனவே, ஈங்கு இரண்டொரு முக்கிய செய்திகளைத் தொட்டு விடுதலே நலமாம்.

உலகில் "அற்புத வித்தைகள்" எனக் கருதப் படும் சிற்பத்திலும் சங்கீதத்திலும் அவருக்கிருந்த பேராவலும் ஆர்வமும் வெறும் எழுத்தால் சித்தரித்துக் காட்டக் கூடியவை யல்ல. சிற்பமும், சங்கீதமுமாகிய இரு மா பெருங் கலைகள் ஒன்றோடொன்று பிணைந்துள்ள கலைகளெனக் கண்டார். அவைகளே அவரது சீவிய காலத்தில் உண்டு களித்த அமிழ்தம் போல்வனவாம். சிற்பத் துறையில் அவருக்கிருந்த அறிவாற்றலும் சிறந்த கருத்துக்களும் இந் நாள் பல அரண்மனைகளாகவும், நகர் நிர்மாணங்களாகவும், பல்கலைக் கழகமாகவும் மிளிர்கின்றன. சமய பேதமற்ற பல கோவில் நிர்மாணங்களிலும், பலப் பட்ட ஆலயத் திருப்பணிகளி

லும் அவர் மனங்கவிந்து பெரும் பொருள் செலவிட்டுள்ளார். ஆலய வழிபாடும் இசையும் பிரிக்கப் படாதவாறு இணைந்துள்ளவை யென்பது செட்டி நாட்டரசர் கண்டறிந்த உண்மையாம். அஃதில் ஒன்றில்லையேல் மற்றொன்றின் தேவையில்லை என்பதை அவர் நன்குணர்ந்திருந்தார் என்பது மிகையல்ல. செட்டி நாட்டிலும் அண்மையில் ஒரு ஆலயத் திருப்பணியில் முனைந்தார். சித்திரக் குளம் அமைத்தார். தண்ணீர் தட்டான நாட்டில் தண்ணீர் தேக்கங்கள் பல கண்டார். தேரோடும் வீதிகளை அமைத்தார். பல விடுதிச் சாலைகளை நிறுவினர். இவ்வாலயம் அவர் ஆயுட் காலத்தே திறந்து விடப்பட்டிருந்தால் அது எம் போல்வார் பலர் மனக் குறையை ஒரோ வழி நீக்கியிருக்கும். என் செய்வது? ஆண்டவன் அருள் வேறாயிற்று! அவ்வாலயத்திற்கும் அதன் சிற்பியாகிய எமக்கும் உள்ள தொடர்பு பெரிது. அதனைச் சிறந்த முறையில் நிர்மாணிப்பதற்கு எம்மை வடநாட்டு நவீன ஆலயப் பணிகளைப் பார்த்து வரச் செய்தார். பார்த்து வந்த யான் அவரிடம் கூறியது என்ன? வடநாட்டுச் சிற்பமுறை, தெய்வ வழிபாட்டின் உச்ச நிலை கண்ட நமது அருள் பழுத்த தென்னாட்டுக்குப் பொருந்தாது எனப் புகன்றேன். எனது கருத்தை முழுதும் ஆமோதித்தார். ஆகையின் அவர் எக் காரியத்தைச் செய்ய முனைந்தாலும் அதனைத் திறம்பட யோசித்துச் செய்யும் இயல்புடையார் என்பது நனி விளங்கும். அவருக்குக் கட்டிட சம்பந்தமாயிருந்த ஆர்வத்தை ஒரு எடுத்துக் காட்டுடன் முடித்தல் சாலும். அடையார் செட்டி நாட்டு மாளிகையைப் பார்த்தபின் வியந்து பேசிய பித்தாபுரம் மன்னருக்கு "நான் எவ்வளவாகிலும் கட்டிடங்கள் சமைப்பதில் வரையின்றிச் செலவிடுவேன். அதுவே எனது மனதிற்கியைந்த பொழுது போக்காகும். இதைவிட்டு என் பணம் மோட்டார்கார்களிலும் கைக் கடியாரங்களிலும் மோதிரங்களிலும் செலவழிக்கப் படுவதில்லை." என அருகிலிருந்த அம் மன்னரின் பெரிய மோட்டார்காரையும் கைவிரல் மோதிரங்களையும் பார்த்த வண்ணமே புன்முறுவலோடு புகன்றார். அம் மொழிகள் இன்றும் என் நினைவிலுள்ள அவரது பல அரிய கூற்றுகளில் ஒன்றாகும்.

இனி அவரது சங்கீத ஆர்வத்தைச் சற்று நோக்குவோம். அவர் சங்கீதத்தை அலுப்பும் சலிப்புமின்றிச் சுவைக்க வல்லவர். ஒரு நாள் நண்பகலில் வெயிலின் கொடுமையையும் மறந்து ஒரு தகரக் கொட்டகையில் விசிறியும் கையுமாக அமர்ந்து இமை கொட்டாது ஆண்டு நடைபெற்ற சங்கீதத்தை நுகர்ந்தார்! வானொலியில் பரப்பப்படும் இனியபாடல்கள் அவரது கவனத்தை

ஈர்ப்பனவாம். முசிரியின் 'திருவடி சரணம்' எனும் உருக்கமான தமிழ்ப் பாடலைப் பன்முறை கேட்க செட்டி நாட்டரசருக்கு விருப்புண்டு. பொதுவாக தியாகராஜ பாகவதரின் எல்லாப் பாடல்களையும் நன்கு ரசிப்பார்; மெச்சிப் பாராட்டுவார். தமிழ் நாட்டு கோகிலம் எனப்படும் சுப்புலட்சுமி அம்மையாரின் பாடல்களில் அபரிமித விருப்பும் நாட்டமும் உடையவர்.

தமிழ் நாட்டில் "இசை" "தமிழிசை" எனும் இரண்டினுள் முந்தியது அருகி ஒளிமங்கி மறைந்து கிடந்தது; பிந்தியது மறந்து பட்டது. இவ்விரண்டுக்கும் புத்துயிர் தந்து தமிழ் நாடெங்கும் இசைமணம் பரிமளிக்கச் செய்த முழுப்பெருமை செட்டி நாட்டரசருக்கே உரித்தாம். தமிழ்நாட்டுப் பண்டைய மூவேந்தர் காணாத இப்புத்தம் புதுத் துறையில் சென்ற செட்டி நாட்டரசரின் கீர்த்தி நமது நாட்டுச் சரித்திரத்தில் உயர் இடம் பெற்று விட்டது. எத்துணைப்பொருட் செலவில் மலைமலையெனத் தோன்றிய பல எதிர்ப்புக்களினிடையில் அவர் தமிழிசையைப் போற்றி வளர்த்தார்! காட்டுத் தீப்போல் கனன்று நாவிட்டெழுந்த அம் முயற்சியும், தமிழிசை—தனித்தமிழிசை இயக்கமும், இந்நாள் எத்துணை உச்ச நிலைபெற்று ஒளிர்கின்றன. இன்றுள்ள தமிழிசை நூல்கள் எத்தனை! தமிழிசை—தனித் தமிழிசைப் பாடப்படும் அரங்குகள் எத்தனை எத்தனையோ! தமிழிசையில் ஈடுபட்ட வித்தகர்கள் எத்தனை! தமிழிசையை வளர்க்கும் பல கலாசாலைகள் இந்நாள் தமிழ் நாடெங்கும் பரவி மிடைந்துள்ளனவன்றோ? தமிழ் அரங்குகளில் மக்கள் தமிழ் பாடலைப் பாட பாடகர்களை வற்புறுத்துவதை எங்கும் காண்கிறோமன்றோ? ஆங்கிலப் பட்டதாரிகளும் உயர் குடும்பப் பெண்மணிகளும் இந்நாள் தமிழிசைப் பண்களில் இறங்கி முழங்குகின்றனர்! இவையனைத்தும் ஒரே சாதாரண மனிதப் பிறவியால் செய்து முடிவுகாணக் கூடிய எளிய காரியங்கள் அல்லவென்பது யாவராலும் ஒப்ப முடிந்த உண்மையாம். ஒவ்வோர் காலத்தே அருள் சுரந்து, அறிவு முதிர்ந்து, செல்வம் செறிந்து எல்லாம் ஒருங்கு திரண்ட ஒருபோது பெருங்காரியங்களைச் சாதிக்க வல்ல அருஞ்சிருட்டிகள்—பெரும் பிறவிகள் தோன்றுதல் இயற்கையாம். எனவே, இத்தகைய உலகப் பெருஞ் சிருட்டிகளில் செட்டி நாட்டரசர் தலை சிறந்தவர் என்பதில் எவ்வித ஐயப்பாடுமில்லை. அவர் மாட்டு இரண்டறக் கலந்திருந்த தமிழிசை ஆர்வத்தை அவரது வாய் மொழி கொண்டே விளக்குதல் ஈண்டைக்கும் பொருந்தும்; சாலப் பொருந்தும். முதல் தமிழிசை மா நாட்டைத் திறந்து வைத்த செட்டி நாட்டரசர் பேசிய பேருரையில் பல பகுதிகளில் ஊன்றிப் பேசிய சில வாக்கி

யங்கள் பின் காணும் சிறு பேச்சாக அமைவதாகும் * அதை ஈங்கு அகழ்ந்து தருதல் முறையாம். ''தமிழிசை புதிதல்ல. தமிழிசை இயக்கம் படையெடுப்பு மல்ல. தமிழிசைச் செல்வமே இந்திய சங்கீதத்திற்குத் தாயூற்றாக இருந்ததென்று தக்க புலவர் ஆராய்ந்து சொல்லுகின்றனர். இனித் தமிழிசையைப் போற்றுவோம். அதிவிரைவில் தமிழிசைக் கலை உச்ச நிலையில் ஓங்கி விளங்கப் போகின்றது. தமிழிசை இயக்கம் தூய கலை இயக்கமே; தமிழிசை இயக்கம் அரசியல் சூழ்ச்சியல்லவென்பதை அழுத்தமாகச் சொல்லுகிறேன். இசை எவர் மிராசுமல்ல. தமிழிசை தமிழரின் பொதுச் செல்வம். அதைப் பயிலவும், பாடவும் வல்லவருக்கெல்லாம் அது பொதுவாகும். இசைக் கலையால் நமது நாடு முழுதும் ஒன்றுபட இடமுண்டு. தமிழர் அனைவரும் அக் கலைக் கோயிலில் அன்புமயமாக விளங்கும் நாளே தமிழர் நன்னாள். அந்நாளை நான் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். நம் தாய் மொழியாகிய தமிழில் இசைக் கலையை ஆதரித்துப் போற்றுவோமாக!'' இவ்வாக்கு தெய்வீக வாக்காகுக. இந்நாள் இணையற்று விளங்குவதில் ஆச்சரிய முண்டோ? மற்றொரு வமயம் நமது கருத்தை விளக்கு முகத்தான் இசையரங்குகளில் ஆரம்பத்தில் கடவுள் வணக்கமும் இறுதியில் மங்களமும் இனிய தமிழ்ப் பாட்டுக்களாக இருத்தல் வேண்டுமென அரசர் வற்புறுத்திக் கூறியுள்ளார். எனவே, செட்டி நாட்டரசர் ஒரு தீர்க்கதரிசி மட்டுமல்லர். தமிழிசையை வளர்த்த தந்தையர் மட்டுமல்லர். அவரே இன்பத் தமிழிசையாளர். தமிழுலகில் இன்று ஒவ்வோர் அரங்கிலும் தூய தமிழில், இன்பத் தமிழிசையில் தமிழை வளர்த்த தனிப் பெரும் வள்ளலாருக்கு தேன் பிலிற்றும் தமிழ் மங்களம் பாடப் பெறுவதாயிற்று! செட்டி நாட்டரசர் புகழ் வாழ்க; தமிழிசை வெல்க; தமிழிசைக் கனமழை மிகுந்து சொரிக. அவ்வெள்ளம் எங்கணும் கரை புரண்டோடுக; எந்நாளும் தமிழிசை வெற்றி வெற்றியே காண இறை அருள்வதாக!

---

* அவரது பேருரையில் தடித்த எழுத்தில் அச்சிடப் பட்டுள்ளன.

டாக்டர் ராஜா ஸர் எம். அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் பேரில்

சரம கவிகள்

[இசைக் கவியரசு, சங்கீத கலா சிகாமணி, T. லக்ஷ்மண பிள்ளை பி. ஏ.]

(1) வானுடனைப் பொலிவெய்திய செல்வ வணிகர் தங்கு
மேனுடெனும் செட்டிநாட்டின் தலைநகர், மென்மலர்கள்
தேனூடு வண்டிசைக்கும் பசுஞ்சோலைச் செறிவுடைய
கானுடுகாத்த நல்லூர், பெற்றதே தமிழ்க், கர்ணனையே.

(2) அரும் பெறலே இந்த வள்ளல் ; நம் நாட்டில் அருந்தவரும்,
பெருந் தமிழ் மக்களும் ஈட்டிய நற்றவப் பேறிவனே ;
திருந்திய சீர்பெற, நம் நாட்டினுக்கும், திருமொழிக்கும்
பொருந்திய காலமிதுவே யென்றுள்ளும் புளகித்ததே.

(3) பல்கலை நந்தமிழ் மக்களிடையில் பரப்புதற்காய்ச்
செல்வக் கழகம் நிறுவி, அண்ணாமலைச் செல்வன் நின்றான்
கல்விக்குப் பஞ்சமென் ? நாம் அறியாமை வன்காட்டிடத்தை
வெல்குவம், மேற்கொண்டு செல்குவம், முன்னணி மேவுவமே.

(4) அற்றார்க் கழிப்பசி தீர்த்தலும், ஏழை அயலவர்க்கும்,
உற்றார்க்கும் வேண்டும் பொருளீதலும், இவ்வுலகினிலே
கற்றார் எழும்பக் கலைதேர் நிலயங்கள் கட்டல் முன்னே,
எற்றாகும் ? கங்கைமுன் சிற்றாறுபோலும், இயம்பிடினே.

(5) இமிழ் கடல் சூழ்நிலத்தே முதற்றோன்றி, இலக்கியச்சீர்
கமழ் தமிழ்ச் செம்மொழி மேலோங்கக் கங்கணம் கட்டி நின்றான் ;
அமிழ்தினுக் கீடென ஆன்றோர் கொண்டாடும் அருமையுற்ற
தமிழினுக் கிப்படி யாரிங்கு தாயகம் தாங்குவரே ?

(6) இசைப் பெரு வள்ளல், இசைக்கலை யோங்க, எழுந்து நின்றான் ;
வசப்பட்ட போன்றி மாறிட்ட மாந்தர் வசமிழந்தார் ;
கசக்கு மனத்தினரா யெதிர்த்தார், அக்கன நிலையை
அசைக்க வல்லா ரல்லராய், ஈசன் ஆற்றல் அணை நின்றதே.

(7) அண்ணாமலை நகர்ப் பல்கலைக் கோயில் அமைத்த தொடு,
பண்ணோங்க ஓர் இசைக்கல்லூரி யாங்கு படைத் திசையைக்
கண்ணாய் வளர்த்த பெருமான், தமிழர் கழுத்துழன்று
புண்ணாக, வாழ்வகன்றானே, இசைக் கென் புகலினியே ?

அண்ணாமலை அரசர் அவர்கள் மீது வாழ்த்துப்பா *

வித்துவான். மு. அருணாசலம் பிள்ளை
அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துத் தமிழாசிரியர்.

இராகம் சுபபந்துவராளி — ஆ: ச ரி க ம ப த நி ச — 45-வது
தாளம் ஆதி — அ: ச நி த ப ம க ரி ச — மேளம்

முதனிலை

அரசே பெருமை அண்ணாமலையே
அவனியிலே யுனக் கிணையிலையே—அரசே

இடைநிலை

உரைசெய் யடியார்க் குதவுஞ் சிவனருள்
உண்மையினாற்பல வூழிகள் வாழ்கவே—அரசே

இறுதி நிலை

(1) ஐயா நினது திருக் கையாற் செய் யறங்கள்
அளவிலையே திரு மகள் தரு நலங்கள்
எய்தாதன வுளவோ நின் சீர்த்தி
என்றும் நிலைபெறும் இதுவே நேர்த்தி—அரசே

(2) உன்னை யடுத்தவர் வாழ்ந்திடச் செய்வாய்
உனது பகைவர் மிகத் தாழ்ந்திடச் செய்வாய்
பொன்னிநகர் வணிகர் குலமுதல் மணியே
புலவர் சொல்மாலை புனைந்தகண் மணியே—அரசே

(3) பெற்றால் உனைப்பெற் றவர்போற் பெறவும்
பிறந்தால் உனைப்போல் பிறவியி லுறவும்
மற்றார் தவம்புரிந் தாரறி யோமே
மனமொழியா லுனை வாழ்த்திடுவோமே—அரசே

* அண்ணாமலைப் பல்கலைக் கழகம், தமிழிசைப் பாடல்கள். தொகுதி 17. பக்-89.

முதல் ; ச ரீ கா , மா மா பா ; | ; ப ப ம கா , | ரீ ரீ ரிரி சச ||
அ ர சே பெ ரு மை | அ ண் ணா | ம லே யே ||
(2) - நி ச ரீ கா , மா மா பா ; | ; ம ப த மா , கா , | ரீ ரீ க ரி ரி ச ||
அ ர சே பெ ரு மை | அ ண் ணா | ம லே யே ||
(3) ச நி ச ரீ கா ; மா மா ப த நி ச | , நி த ச் நி த ப ம | க த ப ம க க ரி ச ||
அ ர சே பெ ரு மை | அ ண் ணா | ம லே யே ||
ச நி ச ரீ க ரீ சா , ச நி த நி | சா ; ; ; | ச் நி த ப ப ம க ரி ||
அ வ னி யி லே யு ன க் | கு | இ ணை யி லே ||
ச நி ச ரீ கா , மா மா பா ; | ; ; ; ; | ; ; ; ; ||
யே அ ர சே பெ ரு மை | | ||
இடை ; ச் ச் நி ரி ச் நி தா , ச் ா ச் நி ச் ா ச் ா | ; நி ச் ரி க் ா , ரீ | ரீ ரி ச் க் ரி ரி ச் ||
உ ரை செ ய் ய டி யார்க்கு | உ த வு ம் | சி வ ன ரு ள் ||
ச் ா ச ச நி த நி ச் ா ரி ச் நீ , த ப மா , த நி ச் ா | ; நி ச் ரி ச் ரி க் ா , , ரி | ரி ச் நி ச் ரி க் ா , ||
உ ரை செய் யடி யார்க்கு | உ த வு ம் சி | வ ன ரு ள் ||
; க் ப் ம் க் ரீ ச் ா ரி ச் ரி ச் ச் ா ச் நி | தா த ச் நி த ப ம | க த ப ம க க ரி ச ||
உ ண் மையினூற் ப ல | - ஆ ழி கள் | வா ழ் க வே ||
ரி நி

"அரசே பெருமை" மூன்றுவது சங்கதியைப் பாடி நிறுத்தவும்

இறுதி ப தா பா , பா பா பா , ப பா | ; ப மா த ப ம கா , | ரீ , ரி சா சா ||
ஐ யா , நி ன து தி ரு க் | கை யா ற் | செய்யறங்கள் ||
; க ரீ க ரீ சா ச க ரி ச நீ சா | ; ச ரீ க மா | பா பா பா ; ||
அளவில்லையே தி ரு | மகள் தரு | ந ல ங் க ள் ||
; எய்தா தனவுள | ; வோ நின் | சீர்த்தி
; என்றும் நிலைபெறும் | ; இதுவே | நேர்த்தி ||

இதை இடைநிலை போற் பாடுக

ii

வித்துவான். மு. அருணாசலம் பிள்ளை
அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துத் தமிழாசிரியர்.

இராகம் : சுத்ததன்யாசி
தாளம் : ரூபகம்

20-வது மேளத்திற்
பிறந்தது

ஆ : ஸ க ம ப நி ச
அ : ச நி ப ம க ச

முதனிலை

வாழ்த்த வேண்டுமே (நாம்) நம்
வள்ளல் அண்ணாமலை யரசனை—வாழ்த்த

இடைநிலை

வாழ்த்துவதே நம் மனமகிழ்வது
தாழ்ச்சியில்லை புகழ்ச்சி பெரிது—வாழ்த்த

இறுதிநிலை

(1) ஆங்கிலந் தென்மொழி ஆரிய மென்மொழி
ஆந்திரம் மலையாள முதல் மொழி
ஓங்கி வளரப் பல்கலைக் கழகம்
ஊழியளவும் வாழச் செய்தலால்—வாழ்த்த

(2) நந்தமிழ் நாட்டில் பைந்தமிழிசை
ஞானம் பரப்பும் மேன்மை பெற்றதால்
எந்த மக்களும் தாய்மொழிப் பாடலை
ஏற்றுணர்ந்துமே போற்ற வைத்ததால்—வாழ்த்த

(3) நன்றி மறப்பது நன்றல தென்றுமுன்
னாட் பெரியோர் சொலும் நல்லுரை யறிவோம்
இன்று நீமக்கிணையில்லா உதவியால்
இன்ப முறுத்திய பண்பினை னுதலால்—வாழ்த்த

முதல்	பா, நி பா மா ப ம ம க மா	பா ; ; நி ச க ம
	வா ழ்த்த வேண் டு	மே நாம்
	ப நி பா ச் நி நி ப மா ப ம ம க மா	பா ச் நி நி ப ; ; க ம ப நி
	வா ழ்த் த வேண் டு	மே நாம்
	ச் நி ச் நி பா மா ப ம ம க மா	நி பா , ; ; ப நி ச் க்
	வா ழ் த்த வேண் டு	மே நாம்
	ம் க் ச் நி பா மா ப ம ம க மா	ச் ச் நி நி பா ; ; மகா , மகா ,
	வா ழ்த்த வேண் டு	மே நம்
	ம க ப ம ம க க ச ச நி சா	ச க ம க க ம ப ம ப நி ச் க்
	வள் ளல் அண் ணு	ம ஊ ய ர ச ஊ
	ம் க் ச் நி பா மா பம ம க மா	நி பா , ; ; ; ;
	வா ழ்த் த வேண் டு	மே
இடை	நி நி பா நீ நீ ச்ா ச்ா	ச் நீ , ச் க்ா , ச் நீ , ச் க்ா , ச் நி ச்ா
	வாழ்த் துவ தே நம்	ம ன ம கிழ் வ து
	நி ச் க் ச் ச் நி நி ப நீ நீ ச்ா ச்ா	ச் நி ச் க்ா , ச் நி ச் க்ா, ச் நி ச்ா
	வாழ்த் துவ தே நம்	ம ன ம கிழ் வ து
	ம் ம் க் க் ச்ா ச் நி நி ப ப நி ச்ா	ப நி ச் க் ச் நி ப ம ப நி ச் க்
	தா ழ்ச்சி யில் ஊ	பு கழ்ச்சி பெ ரி து

	ம் க் ச் நி பா மா ப ம ம க மா	நி பா , ;; ;;	
	வா ழ்த் த வேண் டு	மே	‖
இறுதி	நி நி பா பா ப ம பா பா	மா ப ம ம க க ச ச க க ம மா	‖
	ஆங் கி லந் தென் மொழி	ஆ ரி ய மென்மொழி	‖
	; க ம , ப க ம கா சா ச நி	ச க க ச ச க க ம ம ப பா	‖
	ஆந் தி ரம் ம லை	யா ள மு தல் மொ ழி	‖
	ச் நி நி பா நீ நீ ச்ா ச்ா	; நி ச் , க் ச்ா ச் நி ச்ா	‖
	ஓங் கி வ ள ர ப்	பல் கலைக் க ழ கம்	‖
	நி ச் க் ச் ச் நி நி ப நீ நீ ச்ா ச்ா	; நி ச்ா , க் ச்ா ச் நி ச்ா	‖
	ஓ ங் கி வ ள ரப்	ப ல் கலைக் கழகம்	‖
	ம் ம் க் க் ச்ா ச் நி நி ப ப நி ச்ா	ப நி ச் க் ச் நி ப ம ப நி ச் க்	‖
	ஊ ழி - ய ள வும்	வா ழச் செய்த லா ல்	‖
	ம் க் ச் நி பா மா ப ம ம க மா	பா ; ;; ;;	‖
	வா ழ்த் தவேண் டு	மே	

இசைக்கலை வளர்ச்சி

[யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்]

தமிழிசை நன்றாக வேரூன்றிக் கொண்டது. அதை இனிக் கிளைபரவிச் செழிக்க நாம் வளர்க்க வேண்டும். தமிழிசை இப்போது தான் தளிர் விடுகிறது. அது மலர்ந்து கனிய எவ்வளவோ பாடுபட வேண்டும். இப்பொது இனிய குயில்களும், அழகு மயில்களும் இசைச் சோலையில் பாடி யாடி, செவிக்கும் கண்ணுக்கும் விருந்தூட்டுகின்றன. இனி இசையமுதம் உயிருக்கும் உள்ளத்திற்கும் பயனாக வேண்டும்.

இசையரங்கு இனிய ஓசை பரப்புவது மட்டும் போதாது சிலர் பாடுவது இன்ன மொழியென்றே விளங்காது: சிலர் பாடலில் சரிகமபதநிச சண்டை அமளியாயிருக்கும். ஆனால் பாட்டின் பொருளே விளங்காது. சிலர் தாம் பாடம் பண்ணிய சில உருப்படிகளையே திருப்பித் திருப்பி ஆயுளெல்லாம் பாடிக் கொண்டிருப்பார்கள். வானொலியிலும் அவையே; இசைத் தட்டுகளிலும் மேற்படியே; இசையரங்குகளிலும் அவையே திருப்பித் திருப்பி வரும்; கச்சேரிக்குப் போவதற்குப் பதில், இசைத் தட்டுகளைக் கேட்டாலே போதும். சிலர் பாடுவது ஒரே நேர் கோடுதான். பாட்டின் சுவை குரலில் காண்பதில்லை. ஒரு பாட்டு, கேட்பவர் உள்ளத்தில் பதிய வேண்டுமானால், நல்ல குரல், கமகம், தாளக்கட்டு, வயம், உள்ளுருக்கம், உணர்ச்சி—இவை வேண்டும். பாட்டின் உயிர் பாவலன் அதில் வைத்திருக்கும் உள்ளுருக்கமே. அதை அறிந்து அதற்கேற்றபடியே குரல் இழைய வேண்டும் பக்தி, கருணை, வீரம், இன்பம், துன்பம், விருப்பு, வெறுப்பு, களிப்பு, போராட்டம், வெற்றி, உள்ளக்கிளர்ச்சி இவற்றைக் குரலில் இயக்க வேண்டும். முகத்திலும் கைகளிலும் கூட பாட்டின் உணர்ச்சி பேசவேண்டும். பாட்டின் கருத்தை முதன்மையாக விளக்க வேண்டும். அதற்கேற்றபடி இசை நயங்களையும் பண்ணொழுங்குகளையும் வகுக்கவேண்டும். பாட்டும் பண்ணும் உணர்ச்சியும் உயிரும் உடலும் உள்ளமும்போல், சேர்ந்து இயங்க வேண்டும். அப்படியானால் கேட்பவர் உள்ளத்திலும் வாழ்விலும் பாட்டின் உணர்ச்சி எதிரொலித்து, நல்ல பயனைத்தரும். நாடகப் பாடல்கள் விரைவாக எங்கும் பரவுவதன் காரணம் இதுதான். இசையரங்குகள், பண்ணுடன் உயிர் உணர்ச்சிகளையும் பரப்பவேண்டும். இக்காலம் பக்திப்பாடல்களே பெரும்பாலும் முழங்குகின்றன, மனி

தனைப்பிடித்த நாத்திக ஆணவத்திமிர் தணிந்து அருளுணர்ச்சி யுண்டாகவே பத்திப்பாடல்கள் பயனாகும். உதாரணத்திற்கு ஒரு பாட்டைக் காண்போம் :

(நாட்டைக் குறிஞ்சி—ரூபகம்)

பல்லவி

ஆனந்தக் கண்ணீர் வாராதோ—என்
அந்தா னன்பர் பித்தா, உன்னைச்
சித்தம் குளிரச் சிந்தனை செய்தால்
ஆனந்தக் கண்ணீர் வாராதோ,

இந்தப் பல்லவியைப் பாடும்போதே ஆனந்தக் கண்ணீர் வர வேண்டும், பத்திச் சுவை சொட்டவேண்டும், கேட்பவர் உள்ளம் குளிரவேண்டும். பக்திரசம் அவர்கள் உள்ளத்தில் ததும்ப வேண்டும். அத்தகைய இசையின்பமே நமக்கு வேண்டும் அந்த இசையின் பண்பென்ன ?

அநுபல்லவி

ஞானக் கனலில் உருகிப் பொழியும்
கான ரசத்தைப் பருகித் துதித்தால்,
ஆனந்தக் கண்ணீர் வாராதோ.

உள்ளே ஞான உணர்ச்சி, கனலிட்டு, அதில் உணர்ச்சிவேகம் உருகிப் பொழிந்தால், ஆனந்தக் கண்ணீர் வரும்.

"அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாள் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்.

என்ற பொய்யாமொழியை இசையரங்கில் அன்புள்ளம் உணரும். இசைப்பாட்டில் அடங்கிய அழகுச் சித்திரங்களைக் குரலும் முக பாவனையும் சபைக்கு விளக்கவேண்டும். இந்தச் சரணத்தில் உள்ள உள்ளோவியங்களைக் காண்க :

சரணம்

தேனை ளரவும் சோலைக் குயில்கள்
சிவமங்களம் பாட,

தீம் தகவெனத் திசை குலுங்கத்
தில்லை மயில்கள் ஆட

வானி லாவை மருவித் தழுவும்
மழலைத் தென்றல் போலே

மோன மான தியான சுகத்தில்
நானும் நீயும் கூடிக் குழைந்தால்
ஆனந்தக் கண்ணீர் வாராதோ, (கீர்த்தனாஞ்ஜலி)

"மழலைத் தென்றல் போலே" என்று பாடும்போதும் குரல் கம்பி மாதிரி தென்றல் போல் மென்மையாக இழையவேண்டும், மோனமான என்பதில் இன்னும் மெண்மை, கூடிக் குழையும் போது இன்ப களிப்பைக் காட்டி ஆனந்தக் கண்ணீர் காட்டி உள்ளம் சிலிர்க்க வேண்டும்.

இந்தமாதிரி இனிமையும் உணர்ச்சியும்ததும்பப் பாடுதலுக்கு பாவனைஸங்கீர்த்தனம் அல்லது உணர்ச்சிப் பாட்டு அல்லது கலைப் பண்புள்ள பண் என்னலாம். இந்தப் பாட்டே திருத்தொண்டர்களான சம்பந்தர், அப்பர், சுந்தரர், மீராபாய், துளஸிதாஸ், ஹரி தாஸ், நம்மாழ்வார், ஆண்டாள் போன்ற அருட்புலவர்வாக்கில் எழுந்து, நாட்டில் கடவுளன்பைப் பரப்பியது.

இந்தக் காலம் கொள்ளையும் கொலையும் வறுமையும் மடமையும் போர் வெறியும் எங்கும் அட்டூழியம் செய்கின்றன. இசையின் வாயிலாக இந்த வசைகளை மாற்றலாம். ஆகலால் இந்தக் காலத்தில் கல்வி, தொழில், நாட்டன்பு, ஒற்றுமை, சாதிமத வெறியை நீத்த சமரசம், ஆன்ம நேயம், புதிய பூரண வாழ்க்கை இவற்றை ஊக்கும் பாடல்களே நமக்கு வேண்டும். அவற்றை உணர்ச்சியுடன் பாடினால் சமுதாயத்திற்கு நல்ல பயனாகும். உதாரணப் பாட்டுடன் இக்கட்டுரையை முடிக்கிறேன்.

இராகம் : காபி] [தானம் : ஏகம்

தேனி போலச் சுறுசுறுப்பாய்ச்
சேவை செய்வோமே
ஞானி போல நம்பன் பாதம்
நாட்டம் வைப்போமே.
அடர்ந்த மடமை யிருள கற்றி
அறிவைக் காப்போமே......
தொடர்ந்து தொடர்ந்து, தொண்டு செய்து
துயரை வெல்வோமே......
கல்வி பரவக் கலைகள் ஓங்கச்
கைத்தொழில் செழிக்கச்
செல்வர் பணத்தை வாரிவாரிச்
செலவழிப் போமே.
உழைப்பும் பிழைப்பும் உலகிற் பெருக
உதவி செய்வோமே ;
செழிக்கும் பயனைச் சேமமாகச்
சேர்ந்து துய்ப்போமே. (புது யுகப்பாட்டு)

இசையிற் சிறந்தது செந்தமிழ் இசையே

/வித்வான் பாலூர் து. கண்ணப்ப முதலியார், P. O. L./

தோற்றுவாய்

இன்தமிழ் மொழியில் இல்லாதது எதுவும் இல்லை என்பது எவரும் கண்ட உண்மை. திருவள்ளுவர் திருக்குறளைச் சிறப்பிக்க வந்த சீரியர் ஒருவர் 'எல்லாப் பொருளும் இதன்பால் உள. இதன்பால் இல்லாத எப்பொருளும் இல்லையால்' என்று வாயாரப் புகழ்ந்துள்ளார். திருக்குறள் எம்மொழியால் இயன்றது. செந்தமிழ் மொழியால் அன்றோ அம்மொழியால் அமைந்த நூலில் யாவும் உள எனில், அம்மொழியில் எல்லாம் அமைந்திருக்கு மன்றோ? ஆகவே தமிழ் மொழியில் எல்லாம் உண்டு. இல்லாதது எதுவும் இல்லை என்பது தேற்றமாம் என்க.

இத்தன்மைகளை உற்று நோக்குகையில் 'காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு' என்னும் பழமொழியும் தண்டமிழ் மொழியில் வழங்கப்படும் முதுமொழியென மூதறிஞர் உணர்வர். இவ்வாறு கருமையுடைய காக்கையே தன் பார்ப்பை இத்துணைச் சிறப்பாக எண்ணுமானால், அருமையும் பெருமையும் உடைய தமிழர் தம் மொழியையும், கலையையும் எவ்வளவு சிறப்பித்துக் கொள்வர். அம்முறையில் "இசையிற் சிறந்தது செந்தமிழ் இசை" என்த் தமிழர் இசைப்பதில் வியப்பில்லை எனச் சிலர் கருதுதல் கூடும். எள்ளி நகையாடுதலும் கூடும். அன்னார் அன்னணம் நினையாதவாறு தலைப்புக்கேற்ற பண்பு தமிழ் இசை இடத்து உண்டா இன்று என்பதைச் சிறிது கவனிப்போம்.

இசையின் பொதுத் தன்மை

இசை நுண்கலைகளுள் ஒன்று. இது எவரையும் எதையும் மகிழ நெகிழச் செய்ய வல்லது. இக்கலைக்கும் ஏனைய கலைக்கும் ஒரு சிறந்த வேறுபாடு உண்டு. ஏனைய கலைகள் அவ்வக் கலைகளுள் வல்லுநரை மட்டும் மகிழ்விக்க வல்லது. எடுத்துக் காட்டாக இயம்புவோமானால் சித்திரம் ஓவியம் போன்ற கலைகளில் வல்லார் ஒருவர் தம் கைத்திறன் அமையக் கவின் பெறச் சித்திரத்தைச் சித்திரித்து இருப்பினும் ஓவியத்தை அமைத்து காட்டினும் அவற்றை எவரும் கண்டு இன்புற இயலாது. அக்கலைகளில் வல்ல மற்றொருவர் தாம் நனிவியக்க இயலும். இசைக்கலையோ எனில் அவ்வாறன்று. கல்லார் கல்லாதார் அஃறிணை உயர்திணைப்

பொருள்கள் எவரும் எவையும் கேட்டு மகிழ்வுறச் செய்யும் ஆற்றல் உடையது இசைக் கலையே.

மரஞ் செடி கொடிகள் ஓர் அறிவு உயிர்கள் என மாநூல் புலவர்கள் கூறுகின்றனர். அத்தகைய பொருள்களும் இசைக்கு இளகுகின்றன என்ற குறிப்பு இன் தமிழ் மொழிகளில் எண்ணற்றுக் காணக் கிடக்கின்றன. வண்டின் ஓசையைக் கேட்டதும் மூடிய அரும்புகள், நெகிழ்கின்றன என்பதை 'முல்லை, வரிவண்டூத வாய் நெகிழ்ந்தனவே' என்று குறுந்தொகை நூல் கூறுகின்றது. மதங் கொண்ட யானைகளும் இசைக்கு அடங்கிவிடும் என்பதை நாம் நற்றமிழ் நூல்களில் நவின்றிருப்பதைக் கற்கும்போது இறும்பூதெய்தாமல் இருக்க இயலுமோ. ஒரு பெரிய மலையில் ஒரு பெரிய மதங்கொண்ட யானை பிளிறீட்டு ஓடிவருகிறது. வருவதன் நோக்கம் தினைப்புனத்தில் காணும் தினைக் கதிரைத் தின்னவேண்டியாகும். இந்நிலையில் தினைப்புனம் காக்கும் சிறுமி ஒருத்தி அங்கு அப்புனத்தைக் காத்து நிற்கின்றாள். அவள் அடர்ந்ததும் நீண்டதும் ஆன கூந்தலையுடையவள். அவள் அப்பொழுது தான் சுனையில் நீராடிக் கூந்தலின் ஈரம் புலரக் குழலைக் கோதிக் கொண்டிருக்கிறாள். கோதுகிறவள் இன்பமாகக் குறிஞ்சிப் பண்ணாகிய தனித் தமிழ் இசையை இசைத்துக் கொண்டே தன் மயிரை உளரினள். இந்த இசையில் ஈடுபட்ட முன் ஓடிவரும் யானை அசைவற்று நிற்கிறது. தினைக் கதிரைத் தின்னவும் இல்லை. பசியையும் துறந்து நிற்கிறது. இதைத்தான் அகநானூறு,

"ஒலியல் வார்மயிர் உளரினள் கொடிச்சி
பெருவரை மருங்கில் குறிஞ்சிப் பாடக்
குரலும் கொள்ளாது நிலையினும் பெயராது
படாஅப் பைங்கண் பாடுபெற் றொய்என
மறம்புகல் மழகளிறு உறங்கும்"

எனத் திறம்படத் தீந்தமிழ் மொழிகளில் தீட்டிச் செல்கிறது.

இவ்விசைக்கலை பகையைப் போக்கி நட்பை விளைவித்து எல்லாம் மறக்கச் செய்யும் வன்மையுடையதென ஆனாய நாயனார் எழுப்பிய இசையினின்றும் அறிகின்றோம். ஆனாய நாயனார் தம் குழலை கையில் எடுத்து சிவாயநம என்னும் ஐந்தெழுத்தே சுரமாகக் கொண்டு (பண்டைத் தமிழர் இந்த 'சிவாயநம' என்னும் ஐந்தெழுத்துக்களையே சுரமாகக் கொண்டு இசையை இயம்பி வந்தனர். இக்காலத்தைப் போல ச ரி க ம ப த நி என்னும் ஏழ் எழுத்தால் இசைத்திலர்) இசைத்தார். அக்காலத் தம்முள் பகையுடைய மயிலும் பாம்பும், யானையும் சிங்கமும், மானும்

புலியும் பகை ஒழித்துக்கூடி இருந்து இசை இன்பத்தைத் துய்த்தன என்பது

"நலிவாரும் மெலிவாரும் உணர்வொன்றாய் நயத்தலினால்
மலிவாய்வெள் எயிற்றரவம் மயில் மீது மருண்டு விழும்
சலியாத நிலைஅரியும் தடங்கரியும் உடன்சாரும்
புலிவாயின் மருங்கணையும் புல்வாய புல்வாயும்"

என்ற பெரிய புராணச் செய்யுளால் தெரிய வருகிறது. இன்னோரன்ன பண்பு இசைக்கே அன்று வேறு எதற்குளது! என்னே இசையின் மாண்பு! துடுக்கர்களது துணிகரச் செயலையும் துறக்கச் செய்வதும் இவ்விசைதான். இதனை 'ஆறலை கள்வர் படைவிட அருளின் மாறுதலை பெயர்க்கும் மருவின் பாலை" என்ற அடிகள் புலப்படுத்தும்.

இறையும் இசையும்

இறைவனுக்கும் இசைக்கும் நெருங்கிய தொடர்புண்டு. இறைவன் தன் கையில் யாழ் வைத்திருப்பதன் நோக்கமும் இதனை வற்புறுத்துவதற்கேயாம் "வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்ட மிகுநல்ல வீணை தடவி" என்றும், "எம்மிறை வீணை வாசிக்குமே" என்று தெய்வத் திருமறை இறைவன் இசை விருப்பன் என்பதை எடுத்துக் காட்டுகிறது. இதனால் அவனுக்கு வீணாதர தட்சணாமூர்த்தி என்ற திருநாமமும் உண்டு. "வேதமோடேழிசை பாடுவர்" என்று ஆளுடை பிள்ளையும், 'ஏழ் இசையாய் இசைப் பயனாய்' என்று ஆளுடை நம்பியும் கூறும் பைந்தமிழ்ப் பாட்டுக்கள் பரமனது பாட்டின் விருப்பம் தெற்றத் தெளிய விளங்குகிறது.

தம்பிரான் தோழர் எம்பிரான் தனைநோக்கி இறைவ யான் செய்யக் கடவிதாம் தொண்டு யாது என வேண்டியபோது இறைவன் வேறு எதும் கூறாமல்,

"மற்றுநீ வன்மை பேசி வன்தொண்டன் என்னும் நாமம்
பெற்றனை நமக்கும், அன்பில், பெருகிய சிறப்பில்மிக்க
அர்ச்சனை பாட்டே ஆகும். ஆதலால் மண்மேல் நம்மை
சொற்றமிழ் பாடு கென்றார் தூமறை பாடும் வாயார்"

என்று கூறியுள்ளார். இறைவரை நம்மால் ஈர்ப்பதற்கு இசையை இனிய துணையாகக் கொள்ளலாம். இசையில் இறையை ஈடுபடுத்தி அவரை எங்கும் போகாவாறு இயற்றியும் விடலாம்.

ஒரு சமயம் சேரமான் பெருமாள் நாயனார் தில்லைக்கூத்தனுக்குத் திருத் தொண்டு செய்யும் சீரிய கொள்கையினராய்

விளங்கி வந்தார். அவர் தொண்டு முடிந்ததும் கூத்தப் பெருமானுர் தொண்டர் பூசையைத் தாம் ஏற்றுக்கொண்டதற்கு அறிகுறியாகத் தம் காற்சிலம்பு ஓசையை கலிக்கச் செய்வது மரபு. ஒரு நாள் கழறிற்றறிவார் கனிந்த பூசை முடிந்த பிறகு இயற்கையாக எழும் ஓசை எழவில்லை. இதுகண்ட சேரர் பெருமான் இன்று நம் பூசையில் தவறு உடைத்துப் போலும். அத்தகைய தவறுடைப் பூசை செய்யும் யானே தொண்டன், யானே பொய்யன், வீணன், என்று எண்ணியாராய்த் தம் உடைவாள் கொண்டு உயிரை மாய்க்கத் துணிந்தார். அது காலை காது செவிடுபடக் கருணை வள்ளல் நடராசப் பெருமான் சிலம்போசை எழுந்தது. அது கேட்ட சேரர் தலைவர், இறைவ! என்னே அடியேன் மாட்டுக் குறை என்று வினயமாக வினவியபோது கூத்தரசர்,

> "மன்றி னிடைநம் கூத்தாடல் வந்து வணங்கிவன் தொண்டன்
> ஒன்றும் உணர்வால் நமைப்போற்றி உரைசேர்
> பதிகம் பாடுதலால்
> நின்று கேட்டு வரத் தாழ்ந்தோம்"

என்றார். இன்னோர் அன்ன வரலாறுகளை உற்று நோக்குகையில் இறைக்கும் இசைக்கும் உள்ள தொடர்பை நன்கு அறியலாம்.

இசையும் தமிழும்

இதுகாறும் இசையின் பொதுத் தன்மையையும், இறைவனுக்கும் இசைக்கும் உள்ள தொடர்பைக் கண்டு வந்தனம். இனித் தமிழ் இசையைப் பற்றிச் சிறிது காண்போம். தமிழர்கள் இசையில் தனிச் சிறப்பும் பண்பும் வாய்ந்தவர்கள். இன்றேல் தம் மொழியை முத்தமிழ் எனத் தொகுத்துக் கூறிவரார். முத்தமிழ் என்பது இயற்றமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ் அன்றோ. இசைத் தமிழை நடுநாயகமாக வைத்துக் கூறி இருப்பதினின்றும் தமிழர் இசைத் தமிழுக்குத் தனி இடம் தந்து சிறப்பித்துள்ளார் என்பதுதானே போதருகின்றது. இசைத் தமிழ் இன்றி ஏனைய தமிழ் இயங்காது என்றுகூட இயம்பி விடலாம் நாடகத்திற்கு இசை இன்றியமையாதது என்று இயம்பவும் வேண்டுமா? இயற்றமிழுக்கும் இசைவேண்டற்பாலது. இலக்கண இலக்கியங்கள் இயற்றமிழ் ஆகும். அவை இசையுடன் பயிலும் போதோ பயிலப் படும்போது ஒரு தனி இன்பம்தான். இழுக்குடைப் பாட்டிற்கு இசைநன்று என்று கூறியதன் நோக்கமும் இதுவே ஆகும்.

இசைத் தமிழுக்குரிய இலக்கண நூல்கள் பல தமிழில் உண்டு. பெருநாரை, பெருங்குருகு, இசை நுணுக்கம், பதினறு

படலம், தாள, வகையோத்து, இசைத்தமிழ்ச் செய்யுட்டுறைக் கோவை என்பன இசைத் தமிழ் நூல்களாகும். இவைதாம் முற்ற முடிந்த நூல்கள் அல்ல. சிலவாக எடுத்துக் காட்டியவை ஆகும். எடுத்துக் காட்டாதன பல.

தமிழர் பண்டைக் காலத்தில் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம், என்னும் இச் சுரங்களைக் கொண்டு இராகம்பாடி வந்தனர். இக்காலம் போல சட்சம், ரிஷபம், காந்தாரம், மத்தியமம், பஞ்சமம், தைவதம், நிஷதம், என்னும் சுரங்களைப் பாடிற்றிலர். செம்பாலைப் பண் சங்கராபரணம், படுமலைப் பாலைப் பண் கரகரப்பிரியா, செவ்வழி பாலைப் பண் தோடி, அரும்பாலை பண் கல்யாணி, கோடிப் பாலைப்பண் அரிகாம்போதி, விளரிப்பாலைப்பண் பைரவி என இக்காலத்துப் பாடப்பட்டு வருகின்றன. இவை நம் தமிழர் மறந்திருப்பது அறியாமை அன்றோ.

தேவாரத் தெய்வத்திரு முறையில் காணும் குறிஞ்சி, நாட்டை கொல்லி, தக்கேசி, யாழ்முறி, நேரிசை, செவ்வழி, புறநீர்மை முதலிய பண்கள் தனித் தமிழ் இசைப் பெயர்கள் அல்லவோ. இன்னும் இதன் இயல்புகளை விரிக்கின் பரக்குமெனச் சுருக்கப் பட்டது. தனித்து மற்றொரு கட்டுரையாக இசைத் தமிழ் என்று எழுதுங்கால் விரிவாக எழுதுவோமாக.

இசையிற் சிறந்தது இன்தமிழ் இசையே என்று சொல்வது வெறும் புகழ்ச்சி இல்லை. உண்மையே. இவ்விசையே ஏனையநாடு, மொழி இசைகளில் சிறந்தது என்று அறிந்தே இதைப் பயிலவும் கேட்கவும் பலர் பல நாடு கடந்து காடு கடந்து செந்தமிழ் நாடு வந்துற்றனர் என்ற செய்திகள் எல்லாம் செந்தமிழ் நூல்களில் உண்டு. 'இன்றேல் ஞானசம்பந்தர் தம் திருக்கடைக் காப்பில் தாம் திருமறைக் காட்டைப் பாட வந்துற்றபோது தமிழ் இசையைப் பயின்று இன்புறப் பலர் வெளிநாடுகளினின்றும் ஆங்குப் போந்து இசைபயின்றனர் என்று கூறுவரோ.

"நீறுதிருமேனியின் மிசைத்தொளி பெறத்தடவி வந்திடவமே
ஏறியுல கங்கள்தொறும் பிச்சைநுகர் இச்சையர் இருந்தபதியாம்
ஊறுபொருள் இன்றமிழ் இயற்கிளவி தேருமடமா தருடனூர்
வேறுதிசை ஆடவர்கள் கூறஇசை தேரும் எழில் வேத வனமே."

என்பது மேற்கூறிய கருத்தைக் கூறும் தேவாரம். இன்னோரன்ன காரணங்களினால் இசையிற் சிறந்தது என்பதில் இழுக்கென்னை! நடுநிலை உள்ளீர் நடுங்காது உரைமின்.

இசைக் கனிகள்

(என். எஸ். சிதம்பரம்)

இன்ப விநாயகனே

இராகம் : உதயரவிசந்திரிகா] [தாளம் : ஆதி

பல்லவி

இன்ப விநாயகனே – உன்
எழில்மலர்ப் பாதம் பணிந்தேனே (இன்ப

அனுபல்லவி

அன்பமர் சோலையில் அமர்ந்திடும் அரசே
ஆதாரம் நீயே ஆண்டருள்வாயே (இன்ப

சரணம்

இதய மலர்தனில் இனித்திடும் கனியே
என்றும் நானுன் அன்பன் இனியே
நிதமுமுன் அருட்புகழ் நினைந்திடல் வேண்டும்
நெஞ்சம் வஞ்சம் நீங்கிடல் வேண்டும். (இன்ப)

II

வேணதெல்லாம் தருவான்

இராகம் - அரிகாராயண்] [தாளம் - சாப்

பல்லவி

வேண தெல்லாம் தருவான் – விநாயகன்
விருப்புடன் அவன்கழல் பணிந்திடு மனமே (வேண

அநுபல்லவி

வீணான துயர்தரும் வெவ்வினை களையே
வீழ்த்திடுவான் உனை வாழ்த்திடுவான் மிக (வேண)

சரணம்

நல்லவர் மனத்தினில் மேவிடும் நாதன்
நற்றவத்தோர் சூழ்ந்திடும் அருட் பாதன்
வல்லமெய்ப் பொருளால் வகையிதந் தெருளான்
வஞ்சனை நெஞ்சினில் கொஞ்சமும் வசியான் (வேண)

இசையும் கல்வியும்

ஈ. பார்வதி அம்மையார், இசை விரிவுரையாளர், லேடி வில்லிங்டன் பயிற்சிக் கல்லூரி

கல்வியின் சிறப்பையும் கற்பதின் அவசியத்தையும் பற்றி இக்காலத்தில் அதிகம் சொல்ல வேண்டியதில்லை. அதன் முக்கிய நோக்கம் ஒரு தொழிலில் அமர்ந்து சம்பாதிக்கும் சக்தியைத் தேடுவது. இது மட்டுமல்ல. கல்வி கற்பதனால் அறிவு விருத்தியடைகிறது. தவிர ஒருவித அந்தஸ்திலிருப்பவன் சிற்சில விஷயங்களைக் கற்றுத் தெரிந்திருக்க வேண்டுமென சமூகம் எதிர்பார்க்கிறது. மனிதன் சமூகத்தில் நடந்து கொள்ளும் முறை, தன் குடும்பத்துக்கும், சமூகத்துக்கும் செய்ய வேண்டிய தொண்டு முதலியவைகளைத் தெரிந்து கொள்ளுவதும் கல்வியின் பயன். கற்பதனால் மேலே குறிப்பிட்ட விஷயங்கள் மட்டுமல்லாமல் இவையாவும் சேர்ந்து மனிதனுக்கு ஒரு கலையுணர்ச்சியைக் கொடுத்து, பரிசுத்தமாகவும், நாகரீகமாகவுமிருக்கும் தன்மையையும் அளிக்கிறது. உலகத்தில் பெரியவர்களுடைய எண்ணங்களையும்; மொழிகளையும் அறிந்து கொள்வதாலும், அழகாகவுள்ள எந்த விஷயத்தையும் பார்த்துக் கேட்டு படிப்பதாலும் இக்கலையுணர்ச்சி ஏற்படுகிறது கலையுணர்ச்சி சிறிதளவு பரம்பரையின் மூலம் கிடைத்தாலும் கல்வியினால் பெரிதளவு ஏற்படுகிறது. இக்காரணம் பற்றியே பள்ளிக்கூடங்களில் உயர்ந்த செய்யுட்கள், சங்கீதம், ஓவியம், கைவேலைகள் முதலிய கலைகள் கற்றுக் கொடுக்கப்படுகின்றன.

கலைகளுள் இசைக்கலை மிகச் சிறந்தது. அறுபத்து நான்கு கலைகளுள் இசைக்கலையே சிறந்து ஒலித்துக் கொண்டிருக்கிறது. தாலாட்டு பாடியவுடன் சிறு குழந்தையும் அழுகையை நிறுத்துகிறது. மானிடர் மட்டுமல்ல; பறவைகளும், பிராணிகளும் இசையில் பரவசமடைந்து அசைவற்று நிற்கின்றன. உழைத்து வேலை செய்பவர்கள் நாடோடிப் பாடல்களைப் பாடிக்கொண்டே வேலையின் கஷ்டத்தை மறக்கின்றனர். இசையின் மூலமாகத்தான் மீரா, துக்காராம், தியாகராஜர் முதலியோர் மோக்ஷ சாம்ராஜ்யத்தை எய்தினர்.

சங்கீதம் கற்பதனால் பல நன்மைகள் ஏற்படுகின்றன. பாடுவதால் ஒருவனுடைய குணம் சிறந்து விளங்கி நல்லொழுக்கமுடையவனாகிறான். அவன் நோக்கம் எக்காரியத்திலும் ஒருவித அழகை நாடிச் செல்லுகிறது. மனப் பயிற்சிக்காகக் கற்கும் கல்வியில் சங்கீதம் ஒரு முக்கிய அம்சம். சங்கீதம் கற்பதால் புத்தி விவேகமும், நன்னடத்தையும், நற்பழக்கமும் உண்டாகின்றன. ஒவ்வொரு குழந்தைக்கும் எத்தனையோ உணர்ச்சிகள் உண்டு.

இயற்கையிலேயே குழந்தைகளுக்கு இசை உணர்ச்சி இருப்பது சர்வ சாதாரணம். அவைகளைச் சரியான முறையில் பயன் படுத்த வேண்டும். தேகத்தின் ஒவ்வொரு அங்கத்திற்கும் ஒவ்வொரு வேலை யுண்டு. அதைச் செய்வதாலேயே, அவ்வங்கம் தனக்குரிய முழு வல்லமையைப் பெறுகிறது. நாம் சாரீரத்தை முழுவதும் உபயோகிக்கவில்லை. பாடும்போதுதான் சாரீரத்தை முற்றிலும் உபயோகிக்க முடியும். குழந்தைகளுக்கு இக்காலத்தில் ஆரம்ப வகுப்பில் பாடல்கள் மூலம், தமிழ் வார்த்தைகள், சரித்திரம், கதை, கணக்கு, விஞ்ஞானம் முதலியன கற்பிக்கப்படுகின்றன. எவ்விஷயத்தையும் பல வார்த்தைகளால் தெளிய வைப்பதைவிட இசைமூலம் எளிதில் விளக்க முடியும். குழந்தைகளுக்குப் பாடலுடன் ஆடலும் சேர்த்து அபிநயப் பாடல்கள் கற்றுக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அமரகவி பாரதியார் குழந்தைகட்கு, "காலை எழுந்தவுடன் படிப்பு—பின்பு கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு; மாலை முழுவதும் விளையாட்டு என்று வழக்கப்படுத்திக் கொள்ளு பாப்பா" என்று எழுதியிருக்கிறார்.

கல்வியில் இசை ஒரு முக்கிய அம்சம் என்று கிரேக்கர் கருதினர். அவர்கள் கல்வித் திட்டத்தின்படி இசையும் தேகப் பயிற்சியுமே 7 வயதிலிருந்து 14 வயது வரை கற்பிக்கப்பட்டன. பள்ளிக்கூடங்களில் சங்கீதம் கற்பதனால் எல்லோருடனும்கூடி வேலை செய்யும் முறையைப் பயில்கின்றனர். இசையில் கணக்கும் கவிதையும் உள்ளடங்கி யிருக்கின்றன. இசையின் உண்மை ஆத்மாவில் ஊடுருவிச் சென்று இயற்கையின் உண்மையை பிரதிபலிக்கச் செய்கிறது.

பாடுவதில் குழந்தைகளுக்கு விருப்பம் அதிகம். பள்ளிக்கூடங்களில் மற்ற பாடங்களுக்கு மத்தியில் சங்கீதம் சொல்லிக் கொடுப்பது அவர்களுக்கு உத்சாகத்தையும், சுறுசுறுப்பையும் அளிக்கிறது. சங்கீதம் பாடுவதால் சுவாசகோசங்கள் நன்கு விரிந்து சுருங்கி நல்ல ஆரோக்கியத்தைக் குழந்தைகள் அடைகின்றனர். சங்கீதப் பயிற்சியானது ஞாபக சக்தியை விருத்தியடையச் செய்கிறது. ஒரு விஷயத்தில் மனதை நன்கு ஊன்றிப் படிக்க, சாதகமாயிருக்கிறது. தவிர ஓய்வு நேரத்தை வீணாக்காமல் சங்கீதம் பாடவோ, கற்கவோ, கேட்கவோ செய்தல் நலம். சங்கீத ரசிகர்கள் இருவகைப்படுவர்; அவர்கள் சங்கீதத்தைப்பற்றித் தெரிந்தவர்கள், மற்றவர் சங்கீதத்தைப் பற்றித் தெரியாதவர். பாடப்படும் பாடலின் ராகம், தாளம் கருத்து முதலியவைகளைஅறிந்தவர்கள் மற்றவர்களை விடப் பன்மடங்கு சந்தோஷத்தை யடைகிறார்கள்.

சிறுவயதில் கற்றுக் கொடுப்பதுதான் அவர்கள் மனதில் பசுமரத்தாணிபோல் நன்கு பதியும். ஆகையினால் உயர்ந்த கல்வி கேள்விகளை அறிமுகப் படுத்துதல் உபாத்தியாயர் அல்லது பெற்றோரின் கடமை. சங்கீதத்திலும் அவ்வாறே; சங்கீதத்தைப் பள்ளிக்கூடங்களில் கற்றுக் கொடுக்க வேண்டும். எந்தப் பாடலைக் கற்றுக் கொண்டாலும் அதன் கருத்தையறிந்து பாடினால்தான் சங்கீதத்திற்கு 'பாவம்' ஏற்படும். அதாவது இசையின் வழியாகக் கருத்து வெளியாகும். பள்ளிக்கூடங்களில் முதலில் பாடலின் கருத்தை விளக்கிய பிறகே பாட்டைக் கற்றுக் கொடுக்க வேண்டும். அதன் பின் சங்கீதத்தின் விதிகளில் கவனம் செலுத்த வேண்டும். சிறு வகுப்புகளில் குழந்தைகளுக்குரிய பாடல்கள், சிறு கீதங்கள், கதைப் பாட்டுகள், வேடிக்கைப் பாட்டுகள், சிறிய நாடோடிப் பாட்டுகள் தேசிய கீதங்கள் முதலியன கற்றுக் கொடுக்க வேண்டும். பிறகு மேல் வகுப்புகளில் வர்ணங்கள், சிறிய கீர்த்தனங்கள் கற்றுக் கொடுத்தல் நலம். வகுப்புகளுக்குத் தகுந்த மாதிரியில் படிப் படியாய் அதிகரிக்கும் கஷ்டமான கிருதிகளைப் போதிக்க வேண்டும். சிறிய வகுப்புகளில் எளிதான ராக, தாளங்களிலும், மேல் வகுப்புகளில் சிறிது கஷ்டமான கிருதிகளையும் கற்றுக் கொடுக்கலாம்.

வருங்காலத்தில் ஒரு சிறந்த பதவியை அடையப் போகிய சாதனங்களிருக்கின்றன. வாழ்க்கையில் சங்கீதம் ஒவ்வொரு லௌகிக காரியத்திலும் அவசியமாக இருக்கிறது. சமூக காரியங்கள், வீட்டுக்காரியங்கள், கோவில் உத்ஸவங்கள் முதலியன மங்களகரமான இசை இல்லாது நடப்பதில்லை.

கல்வித்துறையில் சங்கீதம் சமீபத்தில்தான் அடியெடுத்து வைத்திருக்கிறது. இப்பொழுது அநேகர் இக்கலையைப் பயின்று வருகின்றனர். பல இடங்களில் சங்கீதத்திற்கென்று தனிப் பாடசாலைகளும், சங்கீத சபாக்களும், சங்கீதத்தைப் பாடமாகக் கொண்ட பள்ளிகளுமிருக்கின்றன. அகில இந்திய ரேடியோவிலும் இசைப் பயிர்ச்சி என்ற தலைப்பின் கீழ் சங்கீதம் கற்றுக் கொடுக்கின்றனர். இசைக்கலை எல்லோருக்கும் பொதுவானது. இக்கலையின் ஞானம் இல்லாமற் போனாலும் ஒவ்வொருவரும் இசையை அனுபவிப்பதற்குரிய ஞானத்தை எளிதில் பெறலாம். இனி மாணவர் பள்ளிக்கூடப் பாட நிர்ணயத்தில் இசையையும் சேர்த்துக் கொள்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது. இங்ஙனம் செய்வதால் கலை ஓங்கும்; மக்கள் கலை உணர்ச்சி பெற்று நாட்டிற்குகந்தவராவர்.

யாழும் வீணையும்

பேராசிரியர் பி. ஸாம்பமூர்த்தி அய்யர் பி. ஏ., பி.எல்.

பண்டைக் காலத்து இசைக்கருவிகளுள், யாழ் மிக்க சிறந்ததோர் கருவியாகும். அக்கருவியின் அமைப்பு, வடிவம், சுருதி கூட்டும் முறை, வாசிக்கும் முறை முதலிய விஷயங்களைப் பற்றி ஆங்காங்கு பழைய நூல்களில் கூறப்பட்டிருக்கிறது. அமராவதி, ஸாஞ்சி சிற்பங்களிலும், இந்த வாத்தியம் காணப்படுகிறது. ஆனால் தென்னிந்தியாவில் சென்ற ஆயிர வருஷங்களுக்குள் ஏற்பட்ட ஆலயங்களின் சிற்பங்களில் மட்டும் இது காணப்படவில்லை. இது ஒரு வியப்பைத் தரும் விஷயமேயாகும்.

சமீபத்தில் நான் புதுக்கோட்டைக்கருகிலுள்ள திருமயம் (திருமெய்யம்) என்னும் ஊருக்கு ஸங்கீத ஆராய்ச்சி விஷயமாகச் செல்ல நேரிட்டது. அப்பொழுது தற்செயலாக, அந்த ஊர்க் கோயிலில், பள்ளிகொண்ட பெருமாள் கர்ப்பக்கிரகத்தின் சுவரின் பேரில் ஒரு அழகிய யாழ் சிற்பம் இருப்பதைக் கண்ணுற்றேன். உள்ளம் களித்தது. பல ஊர்களின் ஆலயங்களுக்குச் செல்லும் பொழுதெல்லாம், ஆங்காங்குள்ள சிற்பங்களையும் கவனிப்பது எனது வழக்கம். நான் இதுவரைக்கும் பார்த்த ஆலயங்களில் காணாத ஒரு சிற்பத்தைக் கண்டவுடனே என் மனதிற்கு அளவிலா மகிழ்ச்சி உண்டாயிற்று. கர்ப்பகிரகத்திலிருந்ததாலும், இருட்டான இடத்தில் அது அமைந்துள்ளதாலும், இதுகாறும் அந்தச் சிற்பம் ஆராய்ச்சியாளரின் கண்ணுக்கு அகப்படாமற் போயிற்று. அந்த சிற்பத்தில் ரிஷிக்கூட்டத்தின் நடுவில் நாரதர் யாழுடனும், தும்புரு வீணையுடனும் விளங்குகிறார். பெருமாளின் தலைப்பாகத்தில் சுவரிலுள்ள ரிஷிக்கூட்டத்தில், நாரதர் மூன்றாவதாயும், தும்புரு நான்காவதாயும் காணப்படுகிறார்.

குழல், உலகிலுள்ள பல நாடுகளிற் காணுவதைப் போல், யாழ் வகையைச் சேர்ந்த இசைக் கருவிகளும் ஒரு காலத்தில் பல நாடுகளில் உபயோகத்திலிருந்தன. இப்பொழுது அவைகள் சிலநாடுகளில் மட்டுமே உபயோகத்திலிருக்கின்றன. ஆகையினால் பண்டைக் காலத்துத் தமிழரின் 'யாழைப் பற்றிய விவரங்களைத் தெரிந்து கொள்ள இதர நாட்டின் இசைப் பேராசிரியர்களும் ஊக்கம் உடையவராக இருக்கிறார்கள். எகிப்து (Egypt) அஸிரியா

(Assyria) முதலிய தேசங்களின் ஹார்ப் (Harp) என்னும் இசைக் கருவியைப் பற்றிய விவரங்கள் Carl Enegel என்பவர் எழுதியுள்ள "Music of the Most Ancient Nations" என்னும் புஸ்தகத்தில் காணலாம். ஹார்ப் (Harp) என்பது யாழ் வர்க்கத்தைச் சேர்ந்த ஒரு இசைக் கருவி.

முன் காலத்தில் தமிழ் நாட்டில், யாழ் ஒரு சிறந்த கச்சேரி வாத்தியமாக விளங்கிற்று. தேவார காலத்திற்குப் பின் யாழ் மெள்ள மறைய ஆரம்பித்தது. வீணை வாத்தியம் வந்ததும், அதில் பல கமகங்களையும், இசை நுட்பங்களையும் தெளிவுற வாசிப்பதற்கு வசதிகளிருந்ததினால் அதைக் கைப்பற்றலானார்கள். யாழை மெள்ள நழுவ விட்டார்கள். வீணையென்னும் வாத்தியம் திருக்குறளிலும் கூறப்படவில்லை; சிலப்பதிகாரத்திலும் கூறப்பட வில்லை. ஆகவே கி. பி. 2-ம் நூற்றாண்டுக்குப் பின்னரே வீணை தமிழ் நாட்டிற்கு வந்திருக்க வேண்டும். மாணிக்க வாசகர், திருப்பெருந்துறை திருப்பள்ளியெழுச்சியில்,

"இன்னிசை வீணையரி யாழின ரொருபால்"

என்று கூறியுள்ளதிலிருந்து, வீணை அவர் காலத்திலேயே தமிழ் நாட்டில் நிலை கொண்டு விட்டது எனத் தெரிய வருகிறது. மேலும் வீணையின் சிறப்பு, அப்பர் திருவாய் மலர்ந்தருளிய

"மாசில் வீணையும் மாலை மதியமும்"

என்னும் பதிகத்தினின்று தெற்றென விளங்குகிறது.

இசை வல்லுநர்கள், யாழ் வாத்தியத்தை ஏன் நழுவ விட்டார்கள்? முன்பே கூறிய வண்ணம், வீணை வாத்தியத்திலுள்ள இசை சம்மந்தமான வசதிகள் இதில் இல்லாமற் போனதேயாகும்.

மேலும் யாழில் பல நரம்புகளிருந்தன. அவைகளை சுருதி கூட்டுவதற்கு வெகு நேரம் பிடித்திருக்கும். கச்சேரி வாத்தியமாக யாழ் விளங்கின காலத்தில், அது சுத்த மேளத்திற்கு சுருதி கூட்டப்பட்டு, ஏனைய பண்களை யெல்லாம் உற்ற நரம்புகளைக் குரல் நரம்பாக (ஷட்ஜமாக)க் கொண்டு வாசித்தனர். (இப்பொழுதும் ஐரோப்பிய ஸங்கீதத்தில், பிடில் போன்ற வாத்தியங்களில் திட்டமான சுருதிகளுக்கே (G D A E) கம்பிகள் சுருதி கூட்டப்பட்டு வெவ்வேறு சுருதிகளில் (different keys) அமைக்கப்பட்ட உருப்படிகளைக்கம்பியில், அந்த ஆதார சுருதி(relevant key)பேசும்இடத்தையே குரலாக வைத்துக் கொண்டு வாசிக்கிறார்கள்.) இம்மாதிரி கிரக பேதம் செய்து வாசிப்பதில் சில குற்றங்கள் தவறாமல் நேரி

டும். அவைகளை நீக்கி வாசிப்பவனே சிறந்த இசைவல்லானுவான். பிற்காலத்தில் எல்லா பண்களையும் ஓரே சுருதியில் பாடும் ஸம்பிரதாயம் ஏற்பட்டவுடன், பண் மாறும் பொழுதெல்லாம், யாழில் சில நரம்புகளையும் திருப்பி சுருதி கூட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. மெட்டுகளுடன் கூடின வீணையில் இந்த சிரமங்களில்லை. ஆகவே அந்தக் கருவியைக் கைப்பற்றினார்கள். உலோகத்தினல் செய்யப்பட்ட கம்பிகளுடைய இந்த வாத்தியத்தில் சுருதி கூட்டுவதும் சுலபமாக இருந்தது, கமகங்களையும் நுட்ப சுருதிகளையும் வாசிப்பது எளிதாயிருந்தது. வீணையின் பக்க தந்திகள், சுருதிக்காகவும், தாளத்திற்காகவும் உபயோகப்பட்டன. இம் மாதிரி பிரத்தியேகமான கம்பிகள் யாழில் இல்லை.

யாழ் வாத்தியத்தை ஜலதரங்கத்திற்கு ஒருவாறு ஒப்பிடலாம், எப்படி ஒவ்வொரு கிண்ணத்திலும் ஒவ்வொரு ஸ்வரம் தான் பேச முடியுமோ, அவ்வாறே யாழில் ஒவ்வொரு நரம்பிலும் ஒவ்வொரு ஸ்வரம் தான் வாசிக்க இயலும். அந்த ஸ்வரங்களும் சுத்த ஸ்வரங்களாகவே தான் பேசும். யாழில் வல்லவர்கள், ஒரு சிறிய கழியை இடது கையில் வைத்துக் கொண்டு, வேண்டும் பொழுது லேசாக கம்பித கமகத்தையும், ஏற்ற ஜாரு, இறக்க ஜாரு என்னும் கமகங்களையும் வாசித்திருக்கக் கூடும. ஆனல் யாழில் துரிதகால இசை வாசிப்பது மிகவும் கடினமே. மேலும் மனேதர்ம ஸங்கீதம் (ஆலாபனை, தானம் முதலியன) வலுத்த காலத்தில், வீணையில் ராகத்தினுடைய பல சொரூபங்களை வாசித்துக் காட்டுவதற்கான வசதிகள் யாழில் இல்லையென்பதை உணர்ந்தார்கள். யாழிற்கு நல்ல நாதம் இருந்தமையினல் அதை விட்டுவிட மனதுவராமல் வீணையுடன் கூட சில நூற்றாண்டுகள் வாசித்து வந்தார்கள். யாழில் பேசாத இசை நுட்பங்கள் வீணையில் வாசிக்கப்பட்டு இரண்டு கருவிகளின் நாதமும் ஒருங்கே சேர்ந்து நன்ருக இருந்தது. இக்காரணம் பற்றியே, மாணிக்கவாசகர் வீணையரையும், யாழினரையும் சேர்த்துக் கூறுகிருர். 'யாழ்மூரிப் பண்'ணைப் பற்றிய சம்பவத்தை இச்சமயத்தில் ஞாபகப்படுத்திக் கொள்ளலாம். திருஞானசம்பந்தரின் பண் ஒன்றை, திருநீலகண்ட யாழ்ப்பாணர் தனது யாழில் சரியாக இசைத்து வாசிக்க முடியாமல், திகைத்து வெறுப்புக்கொண்ட காலத்தில், சம்பந்தர் அவரை நோக்கி "அது உமது குற்றமல்ல; யாழின் குற்றம்" என்று கூறியது மிகவும் கவனிக்கத் தக்கது.

யாழினர், கோடு அல்லது குச்சியை சில சமயங்களில் உபயோகப்படுத்தினர்களென்பதற்குச்சில சிற்பங்கள் ஆதாரமாயிருக்

கின்றன. வீணை வாத்தியம் தஞ்சாவூரில் ரகுநாத மன்னரின் (கி. பி. 17-ம் நூற்றாண்டு) காலத்தில் தான் பூரண சொரூபத்தை யடைந்தது. இக்காரணம் பற்றியே இதற்குத் தஞ்சாவூர் வீணை என்று பெயர் ஏற்பட்டது. தற்காலத்தில் உபயோகத்திலிருக்கும் 24-ஸ்திர மெட்டுக்களுடைய வீணை, அம் மன்னர் காலத்தில் தான் ஏற்பட்டது. அவர் காலத்திற்கு முன்பு வீணையில். 17 மெட்டுக்கள் இருந்தன. மேலும் மெட்டுக்கள் மெழுக்கின் மேல் பதிக்கப் படாமல், வேண்டிய பொழுது வேறு ஸ்தானங்களுக்கு நகர்த்திக் கொள்ளும்படியான நிலைமையிலிருந்தன. இனி, மெட்டுக்களில்லாத வீணையில், ஒரு சிறிய கொம்பை இடது கையில் வைத்துக் கொண்டு கம்பிகளின்மேல் இழைத்து வாசிப்பது என்னும் எண்ணம் யாழினர் கையிலுள்ள கொம்பினின்றே உற்பத்தியா யிருக்க வேண்டும். இம்மாதிரி வாசிக்கப்பட்ட வீணையை கோட்டு வாத்தியம் (கோடு+வாத்தியம்=கோட்டு வாத்தியம்) எனப் பெயரிட்டனர். கோடு என்றால் மரக்கொம்பு யென்று பொருள். கோடு வாத்தியம் என்கிற பெயர். ரகுநாத மன்னர் "சிருங்கார ஸாவித்ரி" என்று தெலுங்கில் எழுதியுள்ள ஒரு காவியத்தில் காணப்படுகிறது. கோட்டுவாத்யம் (சிலர் இதை மகா நாடக வீணையென்பர்) என்கிற பெயர் பூர்வ இசை நூல்களில் காணப்படவில்லை.

திருமயத்திலுள்ள சிற்பத்தில், யாழ், வாசிக்கும் முறையில் நாரதர் கையில் காணப்படுகிறது. அடிபாகத்தில், படகைப் போன்ற பாகமும், அதன் ஒரு ஓரத்திலிருந்து கிளம்பும் தண்டியும் காணப்படுகிறது. நாரதரின் இடது கை தண்டியின் மேலும் வலது கை விரல்கள் தந்தியின் மேலும் காணப்படுகிறது. இந்த சிற்பம் பல்லவ அரசர், மகேந்திரவர்மன் I காலத்தில் (கி. பி. 760) ஏற்பட்டதெனத் தெரிய வருகிறது. இந்த மன்னர் தான் குடுமியாமலையிலுள்ள பெயர்பெற்ற ஸங்கீதக் கல்வெட்டுக்கும் காரணமாயிருந்தவர். குடுமியாமலை கல்வெட்டில் அவர் காலத்தில் மறைந்து கொண்டு போயிருக்கும் புராதன ராகங்களைக் காப்பாற்றியது போல், திருமயம் கோயில் சிற்பத்தில், மறைந்து கொண்டு போயிருக்கும் இசைக் கருவியாகிய யாழைக் காப்பாற்றியிருக்கிறார். இவர் நம் நாட்டுக்குப் புரிந்துள்ள தொண்டினை என்னென்று புகழ்வது! ஷட்ஜ கிராமம் என்னும் ராகத்தை முதன் முதலில் கூறுவதற்குப் பதிலாக, மத்யமகிராமத்தைக் குடுமியாமலை கல்வெட்டில் கொடுத்திருப்பது மிகவும் கவனிக்கத் தக்கது. மத்யம கிராமத்தின் மத்யம மூர்ச்சனையே, பண்டைக் காலத்துத் தமிழரின்

சுத்தமேளமாகும். இந்த மேளத்திற்குத் தற்காலத்தில் ஹரிகாம் போஜி என்று பெயர்.

சுவாமி விபுலானந்தர், பல ஆண்டுகள் யாழைப் பற்றி ஆராய்ச்சி செய்து "யாழ் நூல்" என்னும் அரியதோர் புத்த கத்தை வெளியிட்டிருக்கிறார். இந்நூலின் அரங்கேற்று விழா சென்ற வருடம் திருக்கொள்ளம்புதூர் க்ஷேத்திரத்தில் நடைபெற்றது. அச்சமயத்தில் ஒரு சிறிய யாழையும் தயாரித்து அவர் காட்டினார். ஆனால் அதை வாசித்துக் காட்டுவதற்கு அங்கு யாரும் வரவில்லை. யாழ் வாத்தியத்தைப் புதுப்பித்து அதை மீண்டும் உபயோகத்திற்குக் கொண்டு வர வேண்டியது தமிழரின் கடமையாகும்.

முத்துத்தாண்டவர் இன்னிசைப் பரிசுப் போட்டி—1948

சென்ற மலரின் தோற்றுவாயில் குறித்தபடி முத்துத்தாண்டவர் இன்னிசைப் போட்டி சங்க நிலையத்தில் 11-4-'48 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு தொடங்கியது. அதில் 22 பேர்கள் கலந்து கொண்டனர். அதற்கு நடுநிலையாளர்களாக திருவாளர் பேராசிரியர் சாம்பமூர்த்தி ஐயர் அவர்கள், ராவ் சாகிப் கே. கோதண்டபாணி பிள்ளை அவர்கள், தஞ்சை பொ. கிருஷ்ண மூர்த்திப் பிள்ளை அவர்கள் இருந்து போட்டியை நடத்தி அடியிற் குறித்தவர்களுக்கு பரிசு வழங்கத் தீர்மானித்தார்கள்.

பெண்களில்:	திருமதி குருவம்மா ராமசாமி.	முதற் பரிசு
	திருமதி டி. விமலா.	மற்றொரு முதற்பரிசு.
	திருமதி முத்து மீனாட்சி.	இரண்டாம் பரிசு.
ஆண்களில்—	திரு. ஜே. வி. தைக்கால்.	இரண்டாம் பரிசு.
	திரு. அ. பாலசுப்பிரமணியம்.	மூன்றாம் பரிசு

மேற்குறித்த இசை வல்லுனர்க்கு நமது மகிழ்ச்சியையும், ஆசியையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். மேற்படி பரிசுகள் நாளது ஆகஸ்ட் மாதம் 19-ம் நாள் செண்ட்மேரி மண்டபத்தில் நடந்த நமது சங்க ஆடல் அரங்கின்போது திரு. ராவ்பகதூர் டி. எஸ். கச்சாபிகேச முதலியார் அவர்களால் வழங்கப் பெற்றது.

திரு. முதலியார் அவர்கள் பரிசு பெற்றோருக்கு (Silver Trophy Cups) வெள்ளிக் கிண்ணங்களை வழங்கி, அவர்கள் வாழ்க்கையில் சிறந்து விளங்க வேண்டுமென்றும், தமிழிசையில் இன்னும் உயர்ந்த தானத்தைப் பெறவேண்டி முயல வேண்டுமென்றும் ஆசிமொழி கூறினார்கள்.

5

மகாகவி, அருணாசலக் கவிராயர்

சாது சங்கரானந்தா, தில்லையாடி.

"மகா கவி அருணாசலக் கவிராயர்" என்று சொன்னால் இன்றைக்கு உலகம் நன்கு அறியும் காரணம் என்ன? இசையரங்கிலும், நாடக அரங்கிலும் இராம நாடகக் கீர்த்தனைகள் பாடப் பெறுமாயின் அவைகளெல்லாம் அருணாசலக் கவியினுடையதே. கவிராயர் அவர்கள் இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழிலும் மிகச் சிறந்து விளங்கியதோடன்றி, சீகாழித்தலப் புராணம், அனுமார் பிள்ளைத் தமிழ், திருக்குறள் வசனம் முதலான அரிய பெரிய நூல்களை இயற்றி, இயற்றமிழ்ப் புலமையிலும் கம்பன் கருத்தையே தழுவி, ஆதிமுதல் இறுதி வரை, ஒவ்வொருவரும் கண்டும், கேட்டும், தமிழ்ச்சுவையை ஆனந்தித்து பருகும் வண்ணம், இராம நாடகக் கீர்த்தனைகளை மிக எளிய முறையில், பொருள் சிறந்து, பொதிந்து கிடக்கும் முறையில் இயற்றி, இசைப் புலமையையும், நாடகப் புலமையையும் தெற்றென உணர்த்தி மக்களுக்கு இன்பம் பயக்கும் வகையில் ஆவன செய்திருக்கின்றார்.

கவிராயர் சைவராயிருந்தும், சாதிமத பேதமென்பதை அறவே ஒழித்தவர் என்பதை எடுத்துக் காட்ட இராமபிரானிடமும், ஹனுமானிடமும் எல்லையில்லா பற்று கொண்டது குறிப்பிடத் தக்கதாகும். மேலும் அவர், வள்ளுவர் குறளை சுரங்கத் தங்கமாகவும், கம்ப ராமாயணத்தை சொக்குத் தங்கமாகவும் பாவித்திருக்கின்றார். கவிராயரின் பாட்டின் நயத்தையும், பொருளின் சிறப்பையும் அறிந்த மக்கள், கம்பரே தனது கவிதைகளுக்கு மெருகு செய்வான் வேண்டி கவிராயர் மறு பிறப்பாக அவதரித்திருக்கின்றார் என்று கொள்ளுவர்.

மற்றும் தமிழ், தெலுங்கு, வடமொழி ஆகிய மும்மொழியிலும் தேர்ந்த அறிஞராக விளங்கியதையும், கவிராயர் இருநூறு ஆண்டுகட்கு முன்னமேயே தமிழுக்கும், இசைக்கும், தக்க பெருமையளித்து புத்துயிர் பெறச் செய்தனர். இத்தகைய ஓர் மகா கவியை தமிழ்நாடு பெற்ற பேறே பேறு! எனினும், மகா கவியை அறியாத மக்கள் ஒருவருமில்லையாயினும், அவரது கவிகளின் சிறப்பையும், திறத்தையும், பொருள்களின் நுணுக்கங்களையும் உள்ளூரப் புகுந்து, உணர்ந்து, மகிழ்ந்து மகா கவியைப் போற்றிக் கொண்டாட தமிழர்கள் முன்னணிக்கு வராதது பெரிதும் வருந்தத் தக்கதாகும்.

கவிஞர் பிறந்த ஊர் தரங்கம்பாடிக்கடுத்த தில்லையாடியாகும். அவரது தந்தை நல்லதம்பிப் பிள்ளை. தாய் வள்ளியம்மை. கவிஞரை ஆதரித்து அன்பு கொண்டவர் தருமபுர ஆதீன பத்தாவது சன்னிதானமாகிய சிவஞான தேசிகர். அறிஞராக்கியது அம்பலவாணக் கவிராயர். இல்லறத்தை விளக்கியது செல்வி மீனாட்சி.

கவிராயருக்கு தமது எட்டு வயதிலேயே திருவருட் சம்மதம் கிட்டிவிட்டது. அதனால்தான் அவருடைய பாட்டில் ஒரு அலாதி மெருகு இருக்கின்றது. அவரது ஒவ்வொரு கவியிலும் இலக்கண இலக்கியங்கள் மட்டுமின்றி போத நிலையும் பொருந்தியிருக்கும். ஆனதால்தான் அவருடைய பாடல்களெல்லாம் உயிர்ப் பாட்டு களாக பரிமளிக்கின்றன. யார் யார், என்னென்னவெல்லாம் எதிர்பார்க்கின்றனரோ, அவைகளெல்லாம் அவரது பாட்டில் பொதிந்து கிடக்கும்.

அவருடைய கவித்திறனையும், அருட் திறனையும் கண்டுதான் தஞ்சை மன்னர் துளஜாஜி மகாராஜா கவிராயரை போற்றிப் புகழ்ந்தனர். கவிராயரின் வீர அருட் சக்தியின் சுடரிலிருந்து பிறந்த ஒவ்வொரு கவிகளின் வீரத்தையும் தெளிவாக அறிந்த மன்னர் துளஜாஜி ராஜாவின் போர் வீரர்கள் "பாய்ந்தானே அனுமான்" என்ற கோஷத்தோடு பாய்ந்து, மதார்முல்மல்க்கை முறியடித்து போரில் வெற்றி பெற்றனர். சரித்திரத்திலேயே தஞ்சை ஜில்லா முகமதியரால் ஆளப்படாமலிருந்ததற்கு காரணம் தில்லையாடி அருணாசலக் கவிதான்.

இன்றைக்கு தமிழிசைக்கே ஒரு தனிப்பெரும் பெருமை உண்டென்றால் அப்பெருமை மகா கவி அருணாசலக் கவிராயர் அவர்களைத்தான் அணுகும் என்பதைக் கேட்டு ஒவ்வொரு தமிழனும் பூரிப்புக் கொள்ள வேண்டும். அறைகுறைப் பாட்டுகள் ஆயிரம் ஆயிரம் புத்தீசல் போன்று எழுகின்றனவென்றால் இன்னும் அருணாசலக் கவியை நன்கு ஆய்ந்து அறியாதது தான் ஒரு பெரிய குறை. இன்று பாருங்கள்! சிற்சில குறிப்பிடத் தக்க பாடல்கள் நாட்டில் பரிமளிக்கின்றனவென்றால் அவைகளெல்லாம் அருணாசலக் கவியை அனுசரித்ததாகத்தானிருக்கும்.

அவர் மறைந்த 167-வது ஆண்டில் மக்களுக்கு அவரை நினைவூட்டும் முறையில் அவரது நினைவு விழா, அவர் பிறந்த ஊராகிய தில்லையாடியிலேயே நடத்தும் பேறு எனக்கு கிடைத்தது குறித்து நான் மகிழ்வடைகின்றேன்.

அத்தகைய பெருமை வாய்ந்த மகா கவி அருணாசலக் கவிராயரின் நினைவு விழாக்கள் பல இடங்களில் சிறப்புற நடக்க தமிழி

சைச் சங்கங்கள் வேண்டிய ஆதரவு அளித்து ஊக்குவிக்க வேண்டு மென்பது என்னுடைய வேண்டுகோளாகும்.

மற்றும், கவிராயரின் நினைவு விழாவை கொண்டாட வேண்டி கடமைப்பட்டுள்ள தருமபுர ஆதீனகர்த்தா அவர்களையும், தமிழார்வம் மிகுதியுள்ள திருப்பனந்தாள் மடாதிபதி அவர்களையும் அணுகி ஆதரவு பெறுமல் மனம் சோர்வடைந்து ஓர் கடிதமூலம் கவிராயர் நினைவு நாளை கொண்டாடாத குறையை தற்கால தமிழிசைத் தாதாவாகிய காலஞ் சென்ற செட்டி நாட்டரசர், ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களுக்கு சுட்டிக் காட்டிய உடனே, முன் பின் அறியாத எனது கடிதத்தைக் கண்ட அளவிலே சகல உதவியுமளித்து என்னை ஊக்குவித்ததின் காரணமாக முதன் முதலில் கவிராயரின் நினைவு நாள் விழா கொண்டாடப் பெற்றது என்பது இங்கு அவசியம் குறிப்பிடத்தக்கதாகும்.

விவேகானந்தா ஆஸ்ரமத்தில் அருணாசலக் கவியின் ஆண்டு விழா

தில்லையாடியில் சாது சங்கரானந்தர் அவர்களை அதிபராகக் கொண்டு விளங்கும் ஸ்ரீ விவேகானந்தா ஆஸ்ரமத்தில் மகாகவி அருணாசலக் கவிராயர் அவர்களின் 169-வது ஆண்டு விழா மிக்க விமரிசையாக நடைபெற்றது.

மாலை 6 மணிக்கு தருமபுரம் ஆதினத்தைச் சேர்ந்த வைத்தீஸ்வரன் கோவில் கட்டளைத் தம்பிரான் தவத்திரு சோமசுந்தர தம்பிரான் அவர்களின் தலைமையில் பிரபல சாகித்ய கர்த்தாவாகிய நாகை திரு, சரவணபவானந்தா அவர்கள்; "மகாகவியின், மகத்துவம்" என்பது பற்றி மிக்க விரிவாகவும், உருக்கமாகவும் பேசினார்கள்.

இரவு 8 மணிக்குமேல் தமிழ் இசைக் குயில் குமாரி M. S. செல்லப்பா அவர்களின் குழுவினரால் அருமையான தமிழிசைக் கச்சேரி ஒன்று நிகழ்த்தப் பெற்றது.

இறுதியில் ஆஸ்ரமத்தின் அதிபர் சாது சங்கரானந்தா அவர்களின் நன்றியுரையுடன் இரவு 11 மணிக்கு நிகழ்ச்சி இனிது நிறைவேறியது.

சென்னை தமிழிசை சங்கத்திலிருந்தும், நாடக கேசரி நவாப் டி. எஸ். ராஜமாணிக்கம்பிள்ளை, தஞ்சை முத்தமிழ் வள்ளல் அருளானந்தசாமி நாடார், அண்ணாமலை சர்வகலாசாலை பண்டித லெ. ப. கரு இராமநாதன் செட்டியார் அவர்களிடமிருந்தும் மற்றும் பல பிரமுகர்களிடமிருந்தும் வாழ்த்துச் செய்திகள் வந்திருந்தன.

பழநி ஆண்டவர்

பழநி S. முத்துசாமி முதலியார் பி. ஏ;

i

சுருட்டி. பல்லவி

பராமுக மேனைய்யா பழநி நாதா

அநுபல்லவி

கராவிழுங்க கரி ஓலிட கடுகியே காத்த செங்கமலக்
கண்ணன் மருகா என்மேல் —பராமுக

சரணம்

நராதிபன் வேளிர் நன்மரபில்வந்த
நலம்பெறு சின்னோப நாய்க்கன் ஐயன் தொழும்
குராவடி வருவேல் குமரா என்னை யிந்த
குவலயந்தனில் நிராதரவாய் விடாதே—கந்தா

ii

ராகம் : தர்பார் பல்லவி ஆதி தாளம்

ஆண்டவா—பழநி ஆண்டவா—பழநி—

அநுபல்லவி

காண்டற்கினிய சிவகிரியில் கொலுவமர்ந்து
வேண்டுவன வேண்டியாங்கெய்தும்—தயாநிதியே — ஆண்டவா

சரணம்

செந்திலம்பதி பரங்குன்றாவி
நன்குடி யேரகம் குன்றுதோராடல்
சிந்தை கனிந்து நினைந்திடும் அன்பர் தொழுமிடம்
திகழ்ந்தவர் படும் துன்பம் தீர்த்தருள் —பழநி

iii

தன்யாசி — பல்லவி ஆதி —

காணவேணுமே திருகார்த்திகை நன்னாளில் கந்தன்
திருவோலக்கமே—சிவகிரிதனில்

அநுபல்லவி

பூணும் தங்கக் கவசப்பொலிவும் ரத்னாபரண் —
பொற்பமை மலர்மாலை புரளும் திருமேனியும்
—காணவேணுமே—

சரணம்

திருவுலாவரு பிரகாரந்தனில் பீடங்கள்
மருவு மிடந்தனில் செந்தமிழ்ப் பனுவல்கள் ஓத
வருதிருப்புகழ் தேவாரப் பண்ணிசைப்பயன்
பரவிட பக்தர் குழாம் நிரை நிரையாய் செல்ல
—காணவேணுமே—

நடனக் கலையின் முறை

தஞ்சை பொ. கிருஷ்ணமூர்த்தி பிள்ளை,
இசைப் பேராசிரியர், தமிழ் இசைச்சங்கம்.

வேத காலத்திலேயே நடனக் கலை மிகவும் சிறப்புடன் இருந்தது என்பதை அறியலாம். அப்போதே நிருத்யம், கீதம், வாத்யம் ஆகிய இவைகள் ஒன்ருய் வளர்ச்சியடைந்தன. நிருத்யம் என்பது கூத்து என்றும் விளங்கியுள்ளதாக அறிகிறோம். வேதத்தில் அநேக இடத்தில் நிருத்ய, கீத, வாத்ய மென்ற சொற்கள் காணப்படுகின்றன. ரிக் வேதத்தில் ஓர் இடத்தில் " உஷஸ் " என்ற தேவதையை நாட்டியப் பெண்ணுக்கு ஒப்பிட்டுச் சொல்லுகிருர். இதைக் கொண்டு வேத காலத்திலேயே பெண்கள் நடனமாடி இருப்பதாகக் கூறவேண்டும். பின் பரத முனிவர் நாட்டியக் கலைக்கு இலக்கண வரம்பு கட்டியுள்ளாரெனவும் காண்கின்ரும்.

நம் நாட்டின் பரத நாட்டியக் கலையானது கூத்து வகையுள் அடங்கியதென்றும், நடராஜமூர்த்தி கூத்தாடினர் என்றும் சிதம்பரத்தின் வாயிலாகவும் காண்கின்ரும். இக்கலைக்கு பலரால் பலவகையான நூல்கள் எழுதிவைக்கப்பட்ட போதிலும் கலையை உருப்படுத்த முடியவில்லை. பத்தாவது நூற்ருண்டில் சோழ மன்னன் இராசராசன் காலத்தில் நானூறு 'பதியிலார்'களையும் அதற்குரிய ஆடலாசிரியர்களையும் கொண்டு இக்கலையை அபிவிருத்தி செய்துள்ளார் என்று கல்வெட்டில் காணப்படுகிறது.

முற்காலத்தில் அரசர்கள் உலாப் புறப்படுங் காலத்திலும், தேவாலயங்களின் பூஜா காலத்திலும் நடனங்கள் ஆடி வந்துள்ளார்கள் எனத் தெரிகிறது. அரசர்கள் உலா புறப்படுங் காலத்தில் வாத்தியங்கள் முழங்கவும் கூத்துகள் ஆடவும் படும் என்பதை அறியலாம். அக்காலத்தில் பரத இசைக் கலைக்கு முக்கிய அம்சமாக விளங்கிய பிரபந்தம், சிம்மநந்தனம், ஜதி, இவைகளை ஆடி வந்துள்ளதாகவும் கூறப்படுகிறது. தேவாலயங்களின் பூஜா காலத்தில் கடவுளுக்குப் பதினறுவித உபசாரங்கள் செய்வது என்றும் அச்சமயத்தில் நர்த்தனங்களை நான்குவிதப் பாகுபாடுகள் செய்து கடவுளுக்கே வாழ்நாளை அர்ப்பணம் செய்த பெண்களால் ஆடப்பட்டதென்றும் அதற்குத் தாளம் மத்தளம் முதலிய வாத்யங்களை வாசிப்பது என்றும் அதை யொட்டியே தற்காலத்

திலும் சில கிராமாந்திரங்களிலும் கடவுள் வழிபாட்டின் சமயத்தில் நர்த்தனம் ஆடிக்கொண்டு வருவதைக் காணலாம்.

தஞ்சையை அரசுபுரிந்து வந்த மகாராஷ்டிர மன்னராகிய சத்ரபதி சரபோஜி அவர்கள் கலைகளின் நுட்பங்களை அறிந்தவராக விளங்கினர். அநேக சாத்திரங்களையும் ஆராய்ச்சிசெய்தார். அத்துடன் பரதம், சங்கீதம், வைத்தியம், ஜோதிடம், இன்னும் அநேக கலைகளிலும் பாண்டித்தியம் பெற்றார். அக்காலத்திலேயே தன் அரசாங்க சபையில் அநேக வித்வத் சிரோன்மணிகளை ஆஸ்தான வித்துவான்களாக அமர்த்திக் கொண்டும் கலைகளின் அதி நுட்பங்களை ஆராய்ச்சி செய்து வந்துள்ளார் என்பது வெளிப்படையாகும். அக்காலத்திற்கு முன் நடனக் கலையானது அரசர்கள் உலா புறப்படுங் காலம் கடவுள் வழிபாடு ஆகிய காலங்களில் ஆடுவதுடன் இருந்ததாக அறிகிறோம்.

அக்காலத்தில் திலகம்போல் விளங்கிய ஸ்ரீ முத்துசாமி தீக்ஷதர் அவர்களின் மாணக்கர்களான தஞ்சை பொன்னையா, சின்னையா, சிவாநந்தம், வடிவேலு ஆகிய சகோதரர்களையும் தன் அரசாங்க சபைக்கு முக்கிய வித்துவான்களாக அமர்த்திக்கொண்டிருந்தார். வித்துவான்கள் பரத சாத்திரக் கலையை நன்காராய்ந்தவர்களாய்க் காணப்பட்டார்கள். வித்துவான்களின் பேரில் அரசருக்கு நன்மதிப்பு ஏற்பட்டது. வித்துவான்கள் அரசர்கள் பேரிலும் தம் குல தெய்வமாகிய பெருவுடையார்பேரிலும் பல பல பாடல்களைப் பாடி அரசர் முன்னிலையில் அரங்கேற்றினர். அரசரின் மகிழ்ச்சியினால் ஆதரவு நாளுக்குநாள் பெருகிட, அரசர் பெருமான் ஓர் நடனசாலை நிறுவி விதிப்படிப் பரத சாத்திரக் கலையை சபையில் அரங்கேற்ற வேண்டுமெனக் கட்டளையிட்டார். அவ்விஷயம் வித்துவான்கள் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டதன் பேரில், வித்வான் பொன்னையா அவர்களே கூத்து என்ற பதத்துக்கு அடைவு என வியாக்கியானம் கூறி, பின்னர் கூத்தின் வகையுள் 12 விதக் கூத்தை எடுத்துக் கொண்டு, 12 அடைவுகளை விதித்து ஒவ்வொன்றிற்கும் உட்பிரிவுகள் 10 அடைவுகள் என வரையறுத்து கூறப்பட்டுள்ளதாக சுவடியில் காணப்படுகிறது. 12 வித அடைவுகளுக்கும் கை முத்திரைகள் அபினயத்தர்ப்பணம் என்னும் நூல் துணையைக் கொண்டும் கால்கள் போட வேண்டியவைக்கு கூத்தின் விளக்கத்தைக் கொண்டும் அடைவுகள் 120 என்று வரையறுத்து நடனசாலைக்கு ஆரம்ப பாடமாக விதித்துள்ளார் என்றும் கர்ண பரம்பரையாகச் சொல்லுவதும் உண்டு.

" அலாரிப்பு "

கடவுளின் வழிபாட்டிற்கென அமைந்துள்ள நான்கு விதி நர்த்தன முறையின் விதிகளைத் தழுவியும் முதல் முதலில் நாட்டியாரம்பத்திற்குக் கடவுளை வணங்குதல் பொருந்தும் எனவும், ஆடவல்லார் சபைக்கு வந்தவுடன் கை கூப்பி வணங்கி நின்று அதன் பின்னர் சில நர்த்தன முறையையும் சில அடைவு ஜாதிகளைக் கொண்டும் அவ்வணக்கத்தை முடிவு பெறச் செய்து அதற்குத் தக்கவாறு சொற்கட்டுகளாகிய ஜதிகளைத் தாளங்களுக்குச் சேர்த்து 3 அட்சரங்கள் கொண்ட (திச்ர ஏகதாளம் முதல் 4, 5, 7, 9, அட்சரங்கள் அடங்கிய சங்கீர ஏக தாளம் வரை சொற்கட்டுகளாகிய) ஜதிகளை ஒரே முறையாக அமைத்தும் ஆடவல்லாருக்கு போதித்தும் அவைகளுக்கு " அலாரிப்பு " என்று பெயர் கொடுத்தும் வழங்கி வந்துள்ளதை அறியலாம்.

" ஜதிசுரம் "

கடவுள் வணக்கம் செலுத்திய பின் அக்கலையின் வணக்கம் செலுத்துவது பொருந்துமென எண்ணியும் நாட்டியப் பகுதிக்கு முக்கியத்துவம் அடைவு என வகுத்துள்ளதை யொட்டியும், அதற்கு ஜதியின் சொற்கட்டு கோர்வைகளைக் கொண்டு பல தாளங்களிலும் முதல் ப்ாகத்தில் முதல் காலமாக 2, 4, 6, 7, ஆவர்த்தனைகள் அடங்கிய ஜதிகளைத் தயார் செய்தும், பின்னர் பல வகை ஜாதிகள் அடங்கி மத்திய கால சொற்கட்டுகளால் பல ஆவர்த்தனைகளுடன் அஜ் ஜதியை முடிவு பெறச் செய்து ஜதிகளுக்கு தக்கவாறு சுரக் கோர்வைகளை அமைத்தும் சுரங்களுக்கு பொருந்தியுள்ள அடைவுக் கோர்வைகளை நிரம்பியும் அங்கங்களாகிய லிங, கால், உடல் முதலியவற்றைச் சீர்படுத்திக் கொள்வதற்கெனவும், ஜதி சுரப் பகுதியை அக் கலையின் இரண்டாவது பாகமாக நடன சாலையில் கற்பித்தார்கள்.

" சப்தம் "

இப்பாட்டில் சொற்கட்டுகள் அடைவு ஜதிகள் அதிகமில்லாமலும் அபிநயம் என்ற பாவப்பகுதிக்கு முக்கிய இடமளிக்கச் செய்துள்ளார். இப்பாடல் சிருங்காரம் பக்தி ரசங்களை உடையதாகவும் கடவுளைப் பலவகையாலும் துதி செய்தும் நாயகா நாயகி பாவமாக வர்ணித்தும் அப்பாடலை நான்கு பாதமாகப் பிரித்து ஒவ்வொரு பாதத்திலும் இரண்டு ஆவர்த்தனைகள் முதல் காலம் சொற்கட்டுகளைச் சேர்த்தும் முடிவில் நான்கு ஆவர்த்தனைகள் மத்திம கால சொற்கட்டுகளுடன் முடிக்கப்பட்டுள்ளது. இப் பாட்டில்

அபிநயமாகிய பாவப் பகுதிக்கு ஓர் சிறப்புக் கொடுத்து ஓர் பதத்திற்குப் பலவித செய்கைகள் குறிப்பையும் முக குறிப்பையும் காட்டிவின்னியாசப் படுத்துவதுடன் ஆடலாசிரியரின் பாட்டின் திறமையைக் காட்டவும் இடமளிக்கவும் செய்துள்ளார். இப் பாடல் தெலுங்கு மொழியில் தான் பாடப்பட்டுள்து. இப்பாடலில் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய அம்சம் இறுதியில் "ஸலாமுரே" என்ற பதம் உபயோகப் படுத்தப்பட்டுள்ளது. மகாராஷ்டிர மன்னர் காலத்தில் பாடியுள்ளபடியால் அவ்வரசரை வணங்க வேண்டியதன் பொருட்டுப் பாடலின் இறுதியில் "சலாமுரே" என்ற பதத்தை உபயோகித்திருப்பதாகக் கூறலாம். இப்பாடலை மூன்றுவதங்கமாகச் சேர்த்து கற்பித்தார்கள்.

"பதவர்ணம்"

அபிநயத்தையும் அடைவு ஜாதிகளையும் சிறப்பிக்க வேண்டியதன் பொருட்டும் பதவர்ணம் நான்காவது அங்கமாகச் சேர்க்கப்பட்டுள்ளது. இப்பாடல்கள் தெலுங்கு, தமிழ் மொழிகளில் அனேகமாக் உள்ளன. அனேக பாடல்கள் சிருங்கார ரசமுள்ளதாகவும் நாயக நாயகி பாவமுள்ளதாகவும் சௌக்க காலமாகப் பாடும் முறையில் அமைந்துள்ளன.

பாட்டின் பொருளைச் செய்கையால் உணர்த்தக் கூடிய அம்சமாகிய, பாவம் என வழங்கி வருத் அபிநயப் பகுதியைக் கொண்டும் ஒரு சொல்லிற்கு அநேக வித செய்கைகளினாலும் முக குறிப்பினாலும் அப்பொருளை விளங்கும்படியான பாவப் போக்கை அமைத்தும், தாளத்திற்குத் தக்கவாறு தீர்மானம், ஜதிசுரம் இவைகளுக்கு அடைவு கோர்வைகளைக் கொண்டு முடிவு பெறச் செய்தும் பின் பதம், தில்லானா, சுலோகம் என்ற பாடல்களையும் நடன அரங்கிற்கு வேண்டிய முறையில் நடனசாலையில் போதித்தும் அரசர் சபையில் நடன அரங்கினை முறைப்படி செய்வித்தும் நடன சாலைக்கு அரசர் ஆதரவில் "சிலம்பக் கூடம்" என்ற பெயர் பெற்றுப் புகழை அடைந்தவர் தஞ்சாவூர் பொன்னையா சகோதரர்கள்.

நடனக்கலைஞர்கள் அப்பெரியார்ரின் போக்கை அனுசரித்து இன்றுவரை நடன அரங்கின் முறையைக் காப்பாற்றி வந்துள்ளார்கள் என்பதைக் காணலாம். இந்த நாட்டியக் கலையைப் பலர் எழுத்தளவில் பல முறைபாக எழுதுகிறுர்கள்; பல முறையாகவும் எண்ணுகிறுர்கள். ஆனல் மக்கள் தொழில் செய்யுமிடத்து அதன் இலக்கண நுட்பங்களை அறிய முடியும் என்பது துணிபாகும்.

ஆனந்த ரூபா *

தஞ்சை ஆபிரகாம் பண்டிதர்

இராகம்: ஆனந்த ரூபா — ஆ. சரிகபதநிச — 29 மேளத்தில்
தாளம்: ரூபகம் — அ. சநிதபகரிச — பிறந்தது.

பல்லவி

ஆனந்த ரூபா அனுதினம் பாட ஞானம் தந்தே அருளே புரிவாய் ||

அனுபல்லவி

தீன தயாளா கீதம் பாட கான தேவா வரமது தருவாய் ||

சரணம்

தூயனுன் பாதம் நாடிப் பணிந்தேன் தீயனென் தீவினை தீர்க்க வாரும்
சேயனைப் பாவித்துத் திருக்கண்பாரும் நேயா உனை மரகதம் பாமாலை சூடி ||

(1)	கா கபதநி நீ	நிநிதத ப கா -	கபதநி த நி ச ரி கரிசநி	சா . . . .
	ஆ னந் த	ரூ . . . பா	அனு தினம் பா -	ட
	ரீ ரி ச ச நி நி த ப	நி த ப க - தப கா	க கா க ரி ச நி நி	நிசரிக - சரிகபகரி
	ஞா னம் . .	தந்தே -	அரு ·ளே - -	புரி - வாய் -
(2)	சரிக ரிகப கபத பதநி	நிநிததபப கா-	கபதநி தநிசரி கரிசநி	கரிசநி சா . .
	ஆனந்த	ரூ . பா	அனு தினம் பா -	ட

* கருணாமிர்த சாகரம்-2-வது புத்தகம், பக்: 310—; இப் பாடல் சங்கம் இசைமணித் தேர்வு பாடமுறையில் வைத்துள்ளது.

	ரீ ரிச சநி நித ப	நிதபக - தப கா	க கா கரி சநி நி	நிசரிக - சரிகபகரி
	ஞா னம் . .	தந் தே -	அரு ளே	புரி வாய்
(3)	ககரி பபக ததப நிநித	நிநிததபப கா -	கபதநி தநிசரி கரிசநி	சா நிசரித . .
	ஆ ன ந் த	ரூ பா	அ னு தினம் பா	ட
	நிக கரிசநி தரி	ரிசநிதபசசநிதப	க்நி நிதபக ரித	தபகரி பகரிச கரிசநி
	ஞா னம் தந்	தே - அரு ளே	புரி	வாய்
(4)	நீ நிசரிக பத நீ	நிநி ததபப கா -	கபதநி தநிசரி கரிசநி	கரிசநி சா . .
	ஆனந்த -	ரூ பா	அ னு தினம் பா	ட
	ரீரிகரி ரிச சநிதப	நிதபக - தப கா	க கா கரிசநி நி	நிசரிக - சரிகபகரி
	ஞா னம்	தந் தே	அரு ளே	பு ரி வாய்
	ரீ க பா -	கபதநி	தநிசரி . . .	சா . . . .
	ஆ ன ந் த	ரூ	பா	

அநுபல்லவி

(1)	பா ப பத நீ	சா	பா ப பத நீ	தநிசரீ . . சா
	தீ ன த யா	ளா	தீ ன த யா	ளா
(2)	பா ப பத நீ	தநிசரி கா . .	கரிகரி கரிசநி ரிசரிச	ரிசநித சநிசநி சநிதப
	தீ ன த யா	ளா		

(3)	பா ப பத நீ	தநிசரி கா . .	நிசரிக கரிசநி தநிசரி	ரிசநித பதநிச சநிதப
	தீ ன த யா	ளா		
(4)	பா ப பத நீ	த நி ச ரி கா . .	நிசரிக - தநிசரி -	பதநிச - கபதநி -
	தீ ன த யா	ளா		
(5)	பா ப பத நீ	தநிசரி கா . .	கா கா ரீ	சரிகரி கரிசா
	தீ ன த யா	ளா	தீ தம்	பா ட
(6)	பா ப பத நீ	தநிசரி கா . .	கா கா ரீ	சரிகப கரிசா
	தீ ன த யா	ளா	தீ தம்	பா ட
	ரீ ரீகரி ரிச ச நி த	க ப த நி சா . .	. . . . . .	. . . . . .
	கா ன தே	வா		
	கநி ரித நிக	கபதநி சா . .	ரிரி ரீகரி ரிசசநித	கபதநி தபகரி சரிகப ‖
	கா ன தே	வா	வ ர ம து	தரு வாய் ‖

சரணம்

பாப பபகரி ச	கா[illegible]நித தநிசரிக	ரிககபபத நிததபபக	ரிகபா . .
தூய னுன்	பா தம்	நா டி .	பணிந்தேன்
பத நீ தபா	பா பபகரி சா	கா . கரிசநி .	தநிசரி கா . .
தீ ய னென்	தீ வி னை	தீர்க்க	வா ரும்

(1)	பாப பத நீ	சா	பாப பத நீ	தநி சரி . . சா
	சேய ஞ	க	சே ய ஞ	க
(2)	பாப பத நீ	தநிசரி சக்ா .	கரிகரிகரி சநி ரிசரிச	ரிசநித சநிசநி சநிதப
	சேய ஞ க	பா வித்து		
(3)	பாப பத நீ	தநிசரி க கா	நிசரிக கரிசநி தநிசரி	ரிசநித பதநிச சநிதப
	சேய ஞ க	பா வித்து		
(4)	பாப பத நீ	தநிசரி க கா	நிசரிக . தநிசரி .	பதநிச . கபதநி
	சேய ஞ க	பா வித்து		
(5)	பாப பத நீ	தநிசரி க கா .	க க கா ரீ	சரிகப கரிசா
	சேய ஞ க	பா வித்து	திருக்கண்	பா ரும்
(6)	பாப பத நீ	தநிசரி க கா .	க க கா ரீ	சரிகப கரிசா
	சே ய ஞைகப்	பா வித்து	திருக்கண்	பா ரும்
	ரீ ரீகரி ரிச சநித	கபதநி ச ச . .		
	நேயா உன்னை	மரக த ம்		
	கநிரிதநிக	கபதநிச . .	ரீ ரீகரி ரிச சநித	கபதநி தபகரி சரிகப ‖
	நேயா உனை	மரகதம்	பா மா லை	சூ டி ‖

கோபால கிருஷ்ண பாரதியார் பாடல்கள் பரிசுப் போட்டி

நமது சங்கத்தின் ஆதரவில், இசைப் பெரியார்களின் நினைவைப் போற்ற, அவ்வப் போது அவர்களது தினம் கொண்டாடப் படுமென சென்ற மலரில் குறிப்பிட்டிருந்தோம். அதன் திருமாணப்படி முதலாவதாக முத்துத்தாண்டவர் பாடல்களின் பரிசுப் போட்டி நடந்து பரிசுகள் 18—8—48-ஆம் நாள் வளங்கப் பெற்றது.

அடுத்தபடியாக, கோபாலகிருஷ்ண பாரதியார் நினைவைக் கருதி, அவரது பாடல்களின் போட்டி நடத்துவதாக தினத்தாளில் அறிவித்திருந்தோம். அதனைக் கண்ணுற்றதும் நமது மாண்பு மிக்க முதல் இந்திய கவர்னர் ஜெனரல் மேன்மை தங்கிய சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் அவர்கள் மகிழ்ச்சி ததும்ப, அதற்கான முதற் பரிசைத் தாமே கொடுப்பதாக செட்டிநாடு அரசர் டாக்டர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களுக்குத் தெரிவித்தார்கள். அதனைப் பெற்றதும் மகிழ்ச்சியுடன் பரிசை ஏற்றும், அதனை நிரந்தரமாக ஆண்டுதோறும் ராஜாஜி அவர்களின் பெயரால் கொடுக்கத் தாமே அதற்கு மூலதனமாக ரூபா 3001-ம் இந்தியன் பாங்கிபில் சேமித்து வைப்பதாகவும் பதிற் கடிதம் எழுதினர்கள். ஆனல், அந்தோ! அதிற் கையெழுத்திடுவதற்குள் அரசர் அவர்கள் அசக்தராகி திடீரென இறைவன் அடியினை எய்தினர்கள். ஆனலுமென்? "தந்தை சொல் மிக்க மந்திரமில்லை" என்றுணர்ந்த அவர்களது அருமைக் குமார ஸ்ரீராஜா அவர்கள் உடனே ரூபா 3001-க்கு உண்டியல் (செக்) ஒன்று அனுப்புவித்து ராஜாஜி அவர்கள் பெயரால் இப்பரிசுக்கு ஒரு மூலதனத்தை ஏற்படுத்தினர்கள். இதன் விபரங்களை 3—7—'48 ல் வெளியான "கல்கி"யில் 'மலை மறைந்தது' என்ற கட்டுரையில், விளக்கி எழுதியுள்ளதை அன்பர்கள் வாசித்திருப்பார்கள். காலஞ்சென்ற செட்டி நாட்டு அரசர் அவர்களின் பிரிவைக் கருதி சிறிது காலதாமதமாயினும், மேற்கண்ட கோபாலகிருஷ்ண பாரதியார் பாடல்களின் பரிசுப் போட்டியை 1948-டிசம்பர் 18 ஆம் நாள் நடத்துவதாகவும், பரிசுகளை டிசம்பர் 23-ம் நாள் மாலை இசை விழாவின்போது வழங்குவதாகவும், தெரிவித்துக் கொள்ளுகிறோம். போட்டியில் தமிழ் இசை வல்லார் (Amateurs only) யாவரும் கலந்துகொள்ளலாம். விண்ணப்பத் தாள்கள் நமது காரியாலயத்தில் பெற்றுக்கொண்டு. 1948 நவம்பர் 30 ஆம் நாளுக்குள் கௌரவ காரியதரிசிகளிடம் வந்து சேரவேண்டும்.

தமிழிசைத் தேன்

ராம. சுப்பிரமணியன், நெற்குப்பை.

1. வெள்ளம் போல் தமிழி சைத்தேன்
   வீடெங்கும் பெருக வேண்டும்!
   அள்ளியே பருக வேண்டும்
   அதனையே தமிழ ரெல்லாம்!
   உள்ளிருள் நீக்கும் சக்தி
   யுள்ளநற் றமிழி னாலே
   பள்ளிகள் நிறைய வைத்துப்
   பயன்பல பெறுவோ மையா!

2. பள்ளத்தை நீர்நி ரப்பும்
   பாங்குபோல் தமிழின் இன்பம்
   உள்ளத்தைச் செவியை, இந்த
   உலகத்தை நிரப்ப வேண்டும்!
   உள்ளொளி பரப்ப வேண்டும்!
   ஒலித்திடும் மணியைப் போலத்
   தெள்ளிய தமிழி சையைத்
   திசையெலாம் முழங்க வேண்டும்!

3. "வள்ளுவன்" குறள்வ குத்த
   மாண்பினை அணியாய்க் கொண்டு
   தெள்ளிய சிறப்புற் றோங்கும்
   செல்விநம் தமிழ்த்தாய் தன்னை
   வள்ளலென் றுரைப்போம்! மிக்க
   மாமேதை யென்போம்! அன்னாள்
   உள்ளமட் டும்ந மக்கு
   ஓர் குறை தானு மில்லை!

4. கரைகாணப் புலமை தன்னைக்
   கடலென வாரித் தந்து
   தரணியில் புகழ்ச்சிக் குன்றில்
   தங்கிட வைத்து நம்மை
   அருமையாய் அழகு பார்ப்பாள்!
   அமரராய் ஆகச் செய்வாள்!
   பெருமையில் மிகுதி பெற்ற
   பெரும்புகழ்த் தமிழ்த்தாய் வாழ்க!